405

விரோதி ஹூ } தை மீ

{ ஸம்புடம் 9 { ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.

(அட்வொகெட்)

:ப்ரசுரிக்கு மிடம்:

2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,

சென்னை—7.

{ January 1950. Vol. 9 No. 1.

JL
189266

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	2
2.	ஸந்த்யோபாஸநம்	8
3.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	12
4.	க்ருதஜ்ஞதாநுஸந்தாநம்	16
5.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	25
6.	மதுராலாபம்	26
7.	ஸம்பாதகரின் குறிப்புகள்	31
8.	செய்திகள்	32

பெண்கள் கலியாணம்.

உங்கள் பெண்ணுக்கு எப்போது விவாகம் நடக்கும்? எந்தத் திக்கிலிருந்து கணவன் வருவான்? மாங்கல்ய பாவம் எப்படி இருக்கிறது? பர்த்ரு பாவம், புத்திர பாக்கியம் இவை எப்படி? தம்பதிகளின் அன்யோன்யம் எவ்வாறு அமையும்? இத்தகைய கேள்விகளுக் கேற்ற விடைகளை நாங்கள் எழுதி யனுப்புகிறோம். பெண் குழந்தைகளுடைய ஜாதகத்தை நன்றாக ஆராய்ந்து இந்த விஷயங்களைச் சாஸ்திர பூர்வமாக நிர்த்தாரணம் செய்து சொல்வோம். பெண்களுடைய துர்ப் பாக்கியங்களான பால வைதவ்யம், ரண்டாயோகம், விஷகன்யா யோகம் என்னும் மூன்று வகையான அமங்கள யோகங்களுக்குச் சாஸ்திரங்களில் தக்க பரிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாகத்திற்கு முன் ஏதேனும் தோஷம் உண்டா என்பதைத்தெரிந்துகொண்டு அதற்கேற்ற பரிகாரங்களைச்செய்து தோஷத்தைப் போக்கிக்கொள்ளலாம். அத்தகைய பரிகாரங்களை நாங்கள் விவரமாக எழுதுவோம். **'விவாக விஷயம்'** என்று குறித்து ஜாதகத்தை உடனே அனுப்புங்கள்.

வி. பி. செலவு உட்பட ரூ. 3—8—0.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ ஜோதிஷசாலை
மோகனூர் (Via) கரூர் S. I. Ry.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் **10** பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு **100-க்கு 20** வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்டுகள் காபி **1-க்கு 4** அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ஸ—ர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விரோதி ௵ தை ௴	ஸஞ்சிகை 1

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

—— :: ——

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தகேஹேஷு கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

[illegible]

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

———:O:———

இந்த அங்கத்தின் தொடக்கத்தில் 'சூலிகை' என்று திரைக்குள்ளிருந்து பாடப்படும் ச்லோகம் படிக்கப்பட்டிருக்கிறது. திரைக்குள்ளிருந்து பாடப்படும் ச்லோகத்தால் முன் நடந்ததை ஒட்டி இந்த அங்கத்தில் காட்டப் போகும் விஷயங்களை ஸூசிப்பதற்கு நாடக லக்ஷண க்ரந்தங்களில் 'சூலிகை' என்று பெயர். '[illegible]' என்று முதலில் ப்ரஸ்தாவனையில 21-ம் ச்லோகத்தில் கூறியபடி, ஸ்வாமி, ஒரு லக்ஷணமும் குறைவில்லாமல் ஸர்வ லக்ஷண பூர்த்தியோடு நாடக ரசனை செய்கிறார். 'இக்கவீந்த்ரர் அவஹிதராய் மிக்க ஜாகரூகராய் ரசனை செய்துள்ளார்' என்று முதலில் கூறப்பட்டது.

[திரைக்குள்ளிருந்து பாடல்]

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

ஐந்து ஸந்திகளில் இது விமர்ஶ ஸந்தியின் ஆரம்பம். கர்ப்ப ஸந்தியில் விக்நங்கள் பல இருந்து மிக்க போராட்டம் நடந்து, இப்பொழுது விரும்பிய மோக்ஷ ப்ரயோஜனத்தின் அடைதலின் நிச்சயம் உதிப்பது காட்டப்படப் போகிறது. தொடக்கம் முதல் நடந்துவந்த யத்நம், விக்நம், விக்நங்களோடு போராட்டம் முதலிய நடந்த விஷயங்களையெல்லாம் விமர்ஶம் செய்வதும் இந்த ஸந்தியில் சேர்ந்தது. இது ஒரு பல நிச்சயத் தொடக்க வட்டம். எதுவரையில் மோக்ஷத்திற்காகப் போராட்டம் கைகூடி வந்திருக்கிறது? ஸம்ஸாரம் ஓயாமல் அலைக்கும் கோரமான ஒரு மஹாமோஹ ஸமுத்ரம். '[illegible]' என்று குலசேகரர் பணிப்பு. '[illegible]' என்று ஆளவந்தாரும் நடுக்கத்துடன் வர்ணிக்கும் மஹா ஸமுத்ரம் ஸம்ஸாரம். 'இதோ (போர் செய்து ஜயித்து) தூரத்திலே வருகிறார் விவேக ராஜர்.' அவரை வர்ணிக்கிறார்.

[illegible]—மோஹ ஸமுத்ரத்தை வயிறு நிறையும்படி உறிஞ்சிக் குடித்து, அதை வற்றி உலர்த்தி அழியச் செய்தவர். மோஹத்தை உறிஞ்சி உண்ணலாமோ? மோஹக்கடல் உள்ளே மனஸ்ஸில் வ்யாபித்து அலைப்பது. அதை அகஸ்த்யரைப்போல் உறிஞ்சி வற்றச்செய்து அழிக்காவிடில், விவேகம் பெருக முடியாது. மோஹத்தை உறிஞ்சி அழித்தால்தான் விவேகம் வளரும். இல்லையேல் விவேகம் பட்டினியால் சாக

வேண்டியதுதான். மோஹத்தை உறுஞ்சுவதே விவேகத்தின் வயிற்றை வளர்க்கும் முறையாகும் என்ற ரஸத்தை ஸூசிப்பது. கும்பஸம்பவ:—அகஸ்த்யர் ஸமுத்ரத்தை உறுஞ்சியது வயிறு வளர்ப்பதற்கல்ல; அவருடைய யோக மஹிமைமட்டுமே என்கிற வ்யதிரேகம் ஸூசிக்கப்படுகிறது. ஶேஷம் வைக்காமல் கடல் நீரை அவர் உறுஞ்சி விட்டார். அக்நி ஶேஷமும், ஶத்ரு ஶேஷமும் வைக்கப்படாது. பாப வாஸனைகள் பங்கம். ஶமந:—மோஹம் மிச்சமில்லாமல் ஶோஷித்தது. உந்முக்தீர்க்க வ்ருக்ஷாரோஹ:—மோக்ஷம் என்னும் கொடி வளர்ந்து வாஸுதேவ வ்ருக்ஷத்தில் சுற்றி அணையவேண்டும். மோக்ஷ லதை முளைத்து பாலாரிஷ்டங்கள் நீங்கி வளருகிறது. 'ப்ரஜ்ஞாஸௌதைக தீப:—ப்ரஜ்ஞை என்னும் உப்பரிகையில் (ப்ராஸாதத்தில்) ஒரே விளக்காய் ஜ்வலிக்கிறார். இதற்கு முன் காமம், க்ரோதம், லோபம், மாத்ஸர்யம் முதலிய கெட்ட ப்ரகாஶங்கள் (அல்லது இருள்கள்) மனத்தைக் கவர்ந்துவந்தன. கெட்ட ஜ்ஞாந ப்ரகாஶங்களை அந்த புத்தி வ்ருத்திகள் தந்துவந்தன. அவை துஷ்ட ப்ரகாஶமும் இருட்டுமாகும். இப்பொழுது அவையெல்லாம் தொலைந்து விவேக தீபம்மட்டும் ஏக ப்ரகாஶமாய் ஜ்வலிக்கிறது. 'ப்ரதிஸமயகதா தூலவாதூலவேக:—எதிர் மதங்களுடைய வாதங்களாகிய பஞ்சுகளைப் புயல்காற்றின் வேகத்தோடு பறக்க அடித்தவர். தீபத்திற்கும் புயல்காற்றுக்கும் எத்தனை விரோதம்? இரண்டு மாகிறாரே இவர் என்ற விரோதாபாஸாலங்கார த்வநி. த்வாரநிரோதநார்கலதாமித:—'பஹுச்சித்ரத்வாரஸம்ப்ரவேஶே' என்று முதல் அங்கத்தில் ஶரீரம் வர்ணிக்கப்பட்டது. 'நவத்வாரே புரே தேஹீ:' என்று கீதை. 'புரமேகாதஶத்வாரம்' என்று கடவல்லீ. துக்கங்கள் புகுவதற்கென்றே உடல், திறந்த பல த்வாரங்களோடு கூடியது. ஒவ்வோர் இந்த்ரியமும் துக்கம் நுழையும் த்வாரம். விவேகர் அந்தந்த இந்த்ரியங்களை அடக்கித் துக்கம் நுழையவொட்டாமல் மிகக்கெட்டியான நீண்ட இரும்புத் தாழ்ப்பாள்களாய் இருக்கிறார். அர்கலதா என்று தாழ்ப்பாளை வர்ணிப்பது ரஸம். முன்பு பல தடவைகளில் மோஹத்தை அவ்வப்பொழுது ஜயித்தும், அது மறுபடியும் மறுபடியும் தாழ்ப்பாளைப் பெயர்த்துக் கொண்டு புகுந்தது. இப்போது அது ஸாத்யமில்லை. க்ருஶரக்ரோதாஶா ஶமக்ஷணத்ரேவஶ: நவஸ்யாஶாரஶோக:—காமாதிகள் அடங்கினாலும் க்ரோதம் என்னும் நெருப்பு அடங்குவது கஷ்டம். 'மேநகை என்னும் காம ரூபமான விக்நத்தை ஒழித்தபிறகும் ரம்பையின்மேல் கோபச் சீற்றத்திற்கு வஶமானார் விச்வாமித்ரர்' என்று ருஷி ஶதாநந்தர் மூலமாகப் பாலகாண்டத்தில் வர்ணித்தார். 'க்ரூஶம் ஶோஷயதி.' ஒருவனுக்குள் கோபம் நுழைந்தவுடனே முதலில் அது அவனைக் கொளுத்தும். எதிரியைக் கொளுத்துவதோ, கொளுத்தப் பார்ப்பதோ பின்னால்தான். 'க்ரோத: கவலயத்யேவ ஹ்ருதயேஷ்வேவ நஶ்யதி'. கோபத்தை நிறைவேற்ற ஸாமர்த்ய மில்லாதவருடைய கோபம், வெளியே எதிரியை ஒன்றும் செய்ய முடியாமல், அவர் உடம்பில் ஒவ்வோர் அவயவத்தையும் எரித்துவிட்டுத்தான் அடங்கும். இவனையே கோப காலத்தில் எரிப்பதும், பின்பு அதன் தீச்செயல்களின் வினைப் பயனால் எரிப்பதும் கோபாக்நியின் ஸ்வபாவம். அதை அடியோடு ஶேஷ மில்லாமல்

அணைத்த திவ்யாம்ருத வ்ருஷ்டியு மானவர். இங்கே அம்ருத மென்னும் மோக்ஷ பலத்தைக் கடைசியில் க்ஷத வஷயாரா ஹொதநழ என்று ஸூசித்துக்கொண்டு ச்லோகத்தை முடிக்கிறார். இப்படி விவேகரைப் பஹுப்ரகாரமாக உல்லேகம் செய்து மோக்ஷ மார்க்கத்தில் இறங்கும் ஹர்ஷத்தை விளக்குகிறார்.

[இந்தச் சூலிகை ச்லோகத்தைத் திரைக்குள்ளிருந்து பாடியதும், ராஜாவும் ஸேநாபதி வ்யவஸாயனும் சேர்ந்து வருகிறார்கள்.]

ராஜா— [களிப்புடனும் கௌரவத்துடனும்] ஸேனைத் தலைவரே! உம்மை முன்னிட்டுக்கொண்டு இன்று மதுகைடபர் முதலிய மஹாஸுரராலும் அரும்பெரும் தேவர்களாலும் ஜயிக்க முடியாத மஹாமோஹன் ஜயிக்கப்பட்டான். [அஸுரரைப்போல் தேவர்களும் மோஹனுக்கு வசப்பட்டவர்களே; ஏற்றத் தாழ்வுமட்டுமே உண்டு.]

வ்யவஸாயன்—ஸ்வாமி! நாங்கள் விவேக பகவானை உமக்கு வாஹநம் முதலியவைபோல உபகரணம் மட்டுமே. எங்கும் உமக்கே முதன்மை. தேவரீருடைய வாசாமகோசரமான யுத்த விளையாட்டு விநோதத்தை நினைத்து நினைத்து நான் ஆச்சர்யமும் இன்பமும் உறுகிறேன். எப்படி எனில்:—

“ நஹ்ய ஸம்ஹஜ்ஞ்த ந ச ஹ்ய க்ஷதி நிபஸா
நைவாருணம் ப்ருகுடிதோ நயநாஞ்சலே ।
க்ஷுத்ராஹவஸ்திதி ந வேஷி ஹவ க்ருதீவ:
அணு உத்தாவடியதீவ தக: ப்ருபஸா: ॥ ”

உம் புருவம் வளையவில்லை. ஒரு புருவ நெறிப்பில்லை. ஸ்வபாவமாய் ஸாமுத்ரிகா லக்ஷணப்படி செவ்வரி யோடியிருப்பதற்கு மேல் துளியேனும் அதிகமாய் உம் கண் கடைகளும் சிவக்கவில்லை. இவற்றால் முகத்திலும் அகத்திலும் எள்ளளவேனும் கோபமே உதிக்கவில்லை என்பது திண்ணம். இப்படி அத்யந்த ஶாந்தி ரஸத்தோடு கோபாவேஶ மில்லாமல் அநாதி கால ப்ரபல ஶத்ருவும் அநாதி காலமாய்த் தானே ஜயித்துக்கொண்டு மிருந்த மோஹரோடும் அவர் படர்களோடும் போர் புரிந்து ஜயம் பெற்றீர். இதென்ன சீற்றமற்ற சண்டை (Non-Violent war) முறை. உம்முடைய ஶத்ருக்க ளெல்லாம் இருந்ததே தெரியவில்லை. அவர்கள் எங்கே போனார்க ளென்றும் தெரியவில்லை. ப்ரசண்டமான உஷ்ண கிரணங்களையுடைய ஸூர்ய பகவான் உதிக்கும்பொழுதே முன்னே தோன்றிய இருள் கூட்டங்கள் இருந்த இடம் தெரியாமல் பறந்து போவதைத்தான் இதற்கு உவமையாகச் சொல்லலாம். முதலாவது அங்கத்தில் விஷ்கம்பத்தின் முடிவில் வஸந்தன், ‘ஹாஹா நஹ்ள ஹஜ திவிஷண்வஷ விவெகஃ’ என்று கூறியதை இங்கே விளக்குகிறார். கோபமே இல்லாமல் எப்படிப் போர்புரிவ தென்றால், ஶாந்தி ரஸம் ஒன்றைக்கொண்டுதான் இந்த உள் ஶத்ருக்களோடு போரிட்டு ஜயிக்கலாம். விவேகருக்குக் கோபம் வந்தால் கோப மென்னும் எதிரிக்கு ஜயம் வந்துவிடும். கௌரவ ஸபையில் பீமஸேனன், “ தர்ம புத்ரர் த்ரௌபதியைச் சூதாட்டத்தில் பணயம் வைத்தாடிய கையை வயிற்றெரிச்சல் தீரக் கொளுத்துகிறேன். ஸஹதேவா! அக்நியைக் கொண்டுவா ”

என்று சீறினன். அப்பொழுது, அர்ஜுநன், “இதுவரையில் நாம் கோபத்தையே காட்டாமல் ‘க்ருஷ்ணன் காப்பாற்றுவார்; நாம் ஏன் நமக்குத் தகப்பன் போன்ற தமையனின் உறுதியை மீறவேண்டும்?’ என்று பொறுமையோடிருந்தால் ஜயம் நம்முடையதாகவே இருந்தது. சூதாட்டத்தில் தோற்றாலும் தர்மத்தில் ஜயம் நம்முடையதேயாயிருந்தது. தர்மத்தில் ஜயந்தானே உத்தம ஜயம். இப்பொழுது நீர் கோபத்திற்கு வசமாகி, பித்ரு துல்ய ஜ்யேஷ்டரை மீறுவதென்னும் அதர்மத்திற்கு இடம் கொடுத்து, கைக்கு வந்த உத்தம தர்ம ஜயத்தை நாம் இழக்கலாமோ?” என்று எடுத்துக் காட்டி பீமஸேநனின் கோபத்தை ஶமநம் செய்தான். இங்கே நடந்தது நற்குணங்களுக்கும் துர்க்குணங்களுக்கும் உட்போர். போரிடுவது ஆள்களல்ல. ஆனால் ஒவ்வொரு துர்க்குணத்திற்கும் எத்தனையோ யானை பல முண்டு. அவை அநாதி ஶத்ருக்கள். அநாதி காலமாய் ஜயம் அவர்களுடையதே. இப்போரில் ரக்தம் சிந்துவதற்கு இடமில்லை. ஆனால் இந்த துர்க்குணங்கள் தங்கள் வலிமையினால் கோடிக்கணக்கான ஜநங்களின் ரக்தம் சிந்தி மடியச்செய்வன. அஜ்ஞாந இருள் கூட்டங்கள் ஜ்ஞாந ஸூர்யன் உதிக்கவே உடனே அகன்றன. ஶமாஸமே அவற்றை விரட்டி யடிக்கும் ஆயுதம்.

[மேலும் கேட்டருளவேண்டும்.]

“த்ரிகுணாத்மகயா திரஸ்கரிண்யா ஸ்தகயாமாஸ ஸமோஹம் யஸ்ய மோஹ: ।
ஸபத்யேவ ததா ப்ரபோதஸூர்யே திவஸே ப்ரதீப இவ நிஷ்ப்ரப: ॥”

மோஹம், இதுவரை முக்குண ப்ரக்ருதி என்னும் திரையினால் நல்லறிவையும் ஆத்ம க்ஷேம மங்களத்தையும் மறைத்து மூடி வந்தது. இப்பொழுது உமக்கு எதிரில் வந்ததும், அது பகலில் ஏற்றிய விளக்குப்போல் ஒளியற்றது. முன் ச்லோகத்தில் மோஹத்தை இருட்டு என்றார். இங்கே அதை உண்மையையும் நலத்தையும் மறைக்கும் திரை என்று வர்ணிக்கிறார். ‘யவநிகா மாயாஜந மோஹிநீ’ என்று சதுச்லோகீ. ‘ஹரவது: ஸ்வரூப திரோதாந கரீம் மாயாம்’ என்று கத்யம். முன்பு ஜ்ஞாந ஸூர்யோதயத்தில் இருட்டு அகன்றது என்றார். இங்கே ஜ்ஞாநப் பகல் வந்ததும் ராத்ரி இருட்டில் ப்ரகாஶித்த மோஹம் ஒளியற்றது என்கிறார். ஜ்ஞாந ஸூர்யன் ஒளிக்கெதிரில் மோஹத்தின் ப்ரகாஶம் ஒடுங்கும்; நீங்கும்.

ராஜா—[உள் மகிழ்ந்து] தாமே இந்த ஜீவனை மோக்ஷணம் செய்ய வேண்டுமென்று அத்யந்த ஸ்வதந்த்ரனான ஈச்வரன் கருணையினால் ப்ரவ்ருத்தித்து நடத்திவரும் இக்கார்யத்தில், அவருக்கு அதீநமாயும் அவரில்லாமல் அசையக்கூடாத பரதந்த்ரனாகிய என்னைத் துதிப்பது உசிதமா? பாரும்.

“வாயுர்நேஷ்டாய யஸ்மை த்ருணமபி ந ஹரேத் பாவகோ நைவ தஹேத்
தேஜோ ராஜந்யதே யத்ருதமபி ந ஜலம் க்லேதயேந்நைவ சோஷயேத் ।
ஹந்த்யஸ்மாத் பீதிதோ(அ)ஸௌ ஸ்வரஸ்வதயே தஸ்ய தாத்ருக் ஸ்வபாவ:
ஸ்வாயத்தாசேஷஸத்தாஸ்திதிர்யதநவரப்ரஹ்ம கிம் நோ நியோக்தா ॥”

எனக்கு ஸ்வாதீந கர்த்ருத்வம் ஏது? 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பழமொழி ஸத்யம். காற்று 'ஸதத கதி' என்று எப்பொழுதும் வீசிக்கொண்டிருப்பது. வாயுதேவர் காற்றுக்கு அபிமாநி தேவதை. அவர் பலிஷ்டர். காற்று அசைவதெல்லாம் பரமாத்மாயத்தமே. அவர் ஆஜ்ஞா சக்ரத்தாலும் அவர் சக்தியாலும் வாயு அசைவதேயல்லது, தன் சக்தியால் ஸ்வாதீநமாக வல்ல. ஈச்வர பல மில்லாமல் ஒரு கார்யத்தையும் செய்ய முடியாது. அவர் ஆஜ்ஞையால் அது பயந்து வீசுகிற தென்றும் பொருள்.* "பீஷா(அ)ஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷா(அ)ஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச" என்கிற தைத்திரீய ச்ருதி ஸ்வாமி நெஞ்சில் உள்ளது. வாயு, நக்ஷத்ரங்கள், ஸமுத்ரம் முதலிய மஹா பூதாதிகள், அவற்றின் அபிமாநி தேவதைகள், ஆகிய இவை பகவானாலேயே ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிலும் நடத்திவைக்கப்படுகின்றன. ஒரு ஜீவனுக்குள்ளிருக்கும் விவேகம் என்னும் நான் பகவதநுக்ரஹ ஸஹாய பலாதிக என்றியில் என்ன செய்யமுடியும்? "உடுகணொகொ(அ)பி ஸஹஸ்ரஶ:" தம் வெயத்—கூட்டங் கூட்டங்களான கணக்கற்ற நக்ஷத்ர மண்டலங்கள் ஆகாயத்தில் அதி வேகமாகச் சுழன்று ஓடிக்கொண்டே இருப்பதும், 'தேஜோராஶயஸ்தேஜயந்—அக்நி ஸூர்யாதி தேஜஸ்ஸுகள் ஓயாமல் மிகுந்த தேஜஸ்ஸுடன் ஜ்வலித்துக் கொண்டேயிருப்பதும். ஸூர்ய சந்த்ர நக்ஷத்ராதி ஜ்யோதிஸ்ஸுகளின் ஒளியை எத்தனை Candle-power என்று கணக்கிட முடியுமோ? என்ன இந்தகம்? 'ஜலதிரபி வேலாம் நாதிக்ராமதி' ஸமுத்ரம் பூமிதேவியை வெள்ளமிட்டு அசைக்காமலிருப்பதும். மாதவனுடைய பத்நீ மாதவனால் ஸமுத்ரத்திலிருந்து தூக்கிக் காப்பாற்றப்பட்டவள். அந்த ஆபத்துப்போல மறுபடியும் ஆபத்து வராமல் காக்கப்படுவதை 'மாதவீ' என்று வராஹாவதார கால விபத்தையும் விமோசநத்தையும் வ்யஞ்ஜநம் செய்கிறார்.

---

* "நெடுங்கடல் நிற்பதும் நாயிறு காய்வதும் நிற்றலுங்கால்
ஒடுங்கி நடப்பதும் தண்கார் பொழிவதும் ஊழிதனில்
சுடுங்கனல் பற்றிச் சுடாதே யிருப்பதும் தும்பை புனைந்(து)
அடுங்கன லாழி யரங்கே சர்தம் திருவாணையினே."

[திருவரங்கத்துமாலை—15

[இதன் பொருள்] பெரிய கடல் (மேன்மேற் பொங்கி எழாமல்) ஒரு நிலையில் அடங்கி நிற்பதும், ஸூர்யன் (தவறாமல் வந்து) வெயில் காய்வதும், காற்று (உலகம் பொறுக்கும்படி) அடங்கி வீசுவதும், குளிர்ச்சியான மேகங்கள் (காலத்தில் வந்து) மழை பொழிவதும், கல்பாந்த காலத்தில் (உலகத்தைச்) சுட்டெரிக்கின்ற படபாமுகாக்நி (அதற்கு முன்பு உலகத்தில்) பற்றிக்கொண்டு (அதனைச்) சுட்டெரித்து அழியாமல் கடலினிடையே அடங்கியிருப்பதும், (ஆகிய இவை யெல்லாம்) தும்பைப் பூ மாலையைச் சூட்டிக்கொண்டு (அஸுரர் முதலிய கொடியவர்களை) அழிக்கின்ற தீ யெழுகின்ற சக்ராயுதத்தை யேந்திய திருவரங்க நாதனது கட்டளையினாலேயாம். மற்றும் :

"கூற்றமுங் கூடலங் கூற்றங் கொல்வதும்
கார்மழை பொழிவதும் கதி ரெரிப்பதும்
மாருத முளர்வதும் வாரி நிற்பதும்
ஆரழல் கடலு மென்னாணை யாகுமால்" [ஸ்ரீ பாகவதம்]

என்பன இங்கு ஒப்பிடத்தக்கவை. [கோ. ஸு.]

" [illegible] ।
[illegible] ॥ "

என்ற விஷ்ணுபுராண பூமி வசநத்தை நினைக்கிறார். இங்கே நிவ்ருத்தியும் பகவதாஜ்ஞா சக்ர மென்று காட்டுகிறார். [illegible]— பூமி ஸ்திரமாக இருந்து எத்தனையோ பர்வதாதிகளைத் தாங்குவதும். [இங்கு 'வா' என்பதற்கு 'உம்' என்பது பொருள்.] முன்பு பூமிக்கு ஸமுத்ரத்தினிடத்திலிருந்து ஆபத்தைக் கூறி, பூமி பலமாய் ஸகலத்தையும் தாங்குவதை இங்கே கூறுகிறார். இந்த ச்லோகம் தத்வமுக்தா கலாபத்தின் முதலாவதான ஜடத்ரவ்ய ஸரத்தின் முடிவில் பாடி யிருப்பதற்கு ஸ்வாமியே ஸர்வார்த்தஸித்தியில் மிகச் சுருக்கமாக வ்யாக்யாநம் செய்துள்ளார். அங்கே '[illegible]' என்கிற அபியுக்தர் ச்லோகம் முதலியவற்றில் அதிகமாகக் கூறியதையும் இதனால் நினைப்பூட்டுவதாக ஸாதித்தார். 'முதலிய' என்பதால்

" த்யௌ: ஸசந்த்ரார்கநக்ஷத்ரம் கம் திஶோ பூர்மஹோததி: ।
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: "

முதலிய வசநங்களின் ஸூசநம். '[illegible]' என்கிற பெரியோர் ச்லோகம், கீதாபாஷ்யத்தில் 9-வது அத்யாயத் தொடக்கத்தில் உதாஹரிக்கப்பட்டது. அதற்கு அத்புதமாகத் தாத்பர்ய சந்த்ரிகையில் பொருள் வர்ணநத்தை ஸேவிக்கவேணும். இவையும் இவை போன்ற அத்புதங்களும் எல்லாவற்றின் பிறப்பும், இருப்பும், வ்யாபாரமும், பரப்ரஹ்மத்தின் ஆணைக்கு அத்யந்தம் வசப்பட்டவை. 'யதநம்' என்பதற்கு 'வ்யாபாரம்' என்று ஸ்வாமி பொருளுரை. இந்த பரப்ரஹ்மத்தின் அநாயாஸமாக அவலீலையாக 'ஸமுத்ர அலைகள்போல் சுற்றிச் சுழன்று ஓடச்செய்வது' அச்சக்ரம். இங்கே பக்தி யோகாப்யாஸம், ஸமாதியில் இறங்கவேண்டிய ஸமயம். இந்த ஸமாதிக்குப் பகவானுடைய அருளும் ஸஹாயமும் பலமு மில்லாமல் முடியாது. நடவல்லியில் யோகாப்யாஸ மார்க்கத்தைக் காட்டுகையில், 'ஸர்வேச்வரனை ப்ரபத்தியினால் வசப்படுத்தின லல்லது ஸமாதி ஸித்தியாது' என்று தெரிவிக்கப்பட்டது. அவனாலேயே எல்லாம் நடக்கவேண்டி தென்கிற அநுஸந்தாநத்துடனே தான் யோகத்தில் இறங்கவேண்டு மென்பதை முதலிலேயே தெளிவிக்கிறார். '[illegible]' என்பதால், '[illegible]' என்கிற ஸூத்ரத்தை வ்யஞ்ஜநம் செய்கிறார். மேலும் இவன் ப்ரயத்நமும் கொஞ்சம் வேண்டியதை அடுத்த ச்லோகத்தில் ஸூசிக்கிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸந்த்யோபாஸநம்

[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலாசிரியர்,
மதுராந்தகம்]

ஈசன் படைத்த ஈரேழுலகிலும் தாங்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய உபகரணங்களுடனேயே ஜீவராசிகள் ஜனிக்கின்றன. அந்த உபகரணங்கள் ஆங்காங்கு வேறுபட்டனவாய்க் காணப்படுகின்றன. வெளியில் பல உபகரணங்க ளிருப்பினும், உயிர் வாழ்வதற்கு உகந்ததாய் உடலிலேயே உள்ள உபகரணங்களையே நாம் இங்குக் குறிப்பிடுகிறோம். மனிதன் ம்ருகம் என்ற இரண்டு வகையை இப்போழுது எடுத்துக்கொள்வோம். மனிதனுக்குப் புத்தி பலத்தையும், ம்ருகத்திற்குத் தேஹ பலத்தையும் உபகரணமாகத் தந்திருக்கிறான் ஈசன். இந்த புத்தி பலம் என்னும் ஜ்ஞாநமே மனிதனை ம்ருகத்தினிடமிருந்து வேறுபடச் செய்கிறது. இது இல்லாவிடில் 'ஜ்ஞாநேந ஹீநா: பஶுபிஸ்ஸமாநா:' என்றபடி ம்ருகதுல்யனாக்கும். மனிதன் செய்யும் கார்யம் ஒவ்வொன்றிலும் விவேக புத்தி வெளிப்படவேண்டும். அதனாலேயே உலக மெங்கிலும் மனிதன் தனக்கென ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதன்படி ஒழுகிவருகிறான். அது மீறியவர்களைத் தண்டிக்கிறான். வெகு ஏன்? பந்தாட்டம் சூதாட்டம் முதலிய விளையாட்டுக்களிலும் கண்கூடாகச் சட்ட திட்டங்களைக் காண்கிறோம். கட்டுப்பாட்டுக் கடங்காதவன் கேவலம் கயவனே. உண்மை இங்ஙன மிருக்க: வைதிகர்களாயுள்ள நமக்குச் சட்டதிட்டங்களை நாமியற்றி, அப்போதைக்கப்போது அவற்றை மாற்றி, நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ள வேண்டாதவகையில், ஸநாதநமான ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்கள் சரியாய் அமைந்துள்ளன. இதை நாம் பெரும் பாக்யமாய்க் கருதுகிறோம். நமக்கு ப்ரியத்தையே செய்யப் புறப்படும் பல்லாயிரம் தாயினும், நம் ஹிதத்தையே இச்சிக்கும் லக்ஷம் தமப்பனினும் எவ்வளவோ மேம்பட்ட ச்ருதி ஸ்ம்ருதிகள் ஈச்வரனின் ஆஜ்ஞைகளாய் வந்துள்ளன. ச்ருதி ஸ்ம்ருதிகளைக் கூடியவரையில் நாம் உறுதியாய்க் கடைப்பிடித்தலே கண்யமும் விவேகமு மாகும். "அடுத்த அறையில் பெரியவர் ஒருவர் இருக்கிறார். இரைந்து பேசினால் அவர் கோபித்துக்கொள்வார். ஒழுங்காய் நடந்துகொள்" என்று அவ ரிருப்பதைக் கண்டுவைத்த ஒரு மனிதர் நமக்குக் கூறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அதை நம்பி நாம் நன்கு நடந்துகொண்டால், அடுத்த அறைப் பெரியவரின் கோபத்திற்குக் குறியாகாமல் தப்புகிறோம். அம்மனிதனின் கூற்றுப் பொய்யாயிருந்து, அறையில் பெரியவர் இல்லாம லிருப்பின், நாம் சிறிதுபோது ச்ரமத்துடன் சீராய் நடந்தது நன்மை பயக்காமல் போகலாம். ஆனால் அதனால் தீமை ஏதும் உண்டாகா தென்ப தென்னவோ திண்ணம்.

வைதிகர்களின் பரலோக உபதேசம் இங்ஙனமே நம்பி நடைமுறையில் பின் பற்றத்தக்கது. பரலோகம் இருப்பினும் இல்லாவிடினும், ஒரு சிலர் இருப்ப தாய்க் கூறி ஸந்தேஹத்தைக் கிளப்பிவிட்டபிறகு, இருப்பதாய் வைத்துக் கொண்டே விவேகி நல்வழியில் நடக்கவேண்டும். அதனால் ஒன்று நிறைந்த நன்மை உண்டாகலாம்; உண்டாகாமலும் போகலாம். தீமை என்ப தென்னவோ தினையளவும் கிடையாது. பரலோகம் இல்லை யென்று தன்னில் தான் துணிவுகொண்டு, மனம்போன போக்கில் போவார்க்கு, அது இருந்துவிடுமாகில் வந்தது விபரீதம். இப்பொழுது நாம் 'இருப்பினும் இல்லாவிடினும்' என்று பரலோகத்தை ஸந்தேஹித்துப் பேசுவது, பிறரை நம் வழி கொணர்வதற்கே. உண்மையில் நமக்குக் கனவிலும் பரலோகம் பற்றின ஸந்தேஹம் இல்லை. ஆக சாஸ்த்ரீய நியமங்களை அநுஸரிக்கவேண்டும் என்பது இதனாற் சொல்லப்பட்டதாகிறது.

அவைகளில் முந்தா முன்னம், ஸர்வ கர்மாக்களும் செய்வதற்கு யோக்யதையைத் தரும் ஸந்த்யோபாஸநம் சிறிது ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. 'ஸந்த்யையின் உபாஸநம்' என்று பொருள்படும் ஸந்த்யோபாஸநம் என்னும் பதம், ச்ருதி ஸ்ம்ருதிகளில் அப்படியே ப்ரயோகிக்கப்படுகிறது. அதில் கடைசி பதத்தை முதலில் எடுத்துக்கொள்ளுவோம். உபாஸநம் பஜநம் என்பவைகள் ஒரு பொருளுள்ள பதங்கள். உபாஸநம் என்பது வேதாந்தங்களில் ஸத்வித்யை முதலியவைகளில் ஒருவிதமான ப்ரஹ்ம த்யாநத்தைச் சொல்லுகிறது. அதே பதம் ஒரு கர்ம விஷயத்தில் ப்ரயோகிக்கப்படுவது, இந்தக் கர்மாவினுடைய எற்றத்தைக் கணிசித்துத்தான் என்று தோன்றுகிறது. ஸந்த்யை என்பது இரவு பகல்களுடைய ஸந்தி அல்லது சேர்க்கை என்றதாகும். அதில் செய்யும் உபாஸநமாகையால் இப்பெயர் இதற்கு எற்பட்டது. ஸந்த்யா காலம் என்பது காலையில் நக்ஷத்ர ஒளி மங்க ஆரம்பித்ததுமுதல், ஸூர்யன் உதயமாகும் வரையிலும், மாலையில் ஸூர்யாஸ்தமநத்திற்கு முன்பிலிருந்து நக்ஷத்ரம் ப்ரகாசிக்க ஆரம்பிக்கும் வரையிலும் உள்ள ஸமயமாகும். இவைகளுக்கு நடுவில் உள்ள நடுப்பகல் மத்யாந்ந ஸந்த்யையாகும். இவ்விஷயத்தைப் பரத்வாஜர்,

"ஹ்ராஸவ்ருத்தீ தாரகாஜ்யோதிஷா நக்ஷத்ரதர்சநாத்। ஹ்ராஸஸ்யாதித்யஸ்ய ப்ராப்யோதஹஷிர்ஹிரி। ஸூர்யஸ்யார்த்தாஸ்தமயோ ஸ்வல்பகாலஹ்ரா தாரகோதயாத்। ஸாயம் ஸந்த்யேதி ஸா ப்ரோக்தாதயோர்ப்ரோக்தா ப்ரதா॥"

என்று சொல்லுகிறார். இப்படி நடுவில் உள்ள காலம் ஸந்த்யை என்று எற்பட்டதை ஸ்ரீவைதிக ஸார்வபௌமர், 'ஹ்ராஸோதயாத் வடிகாத்வயாத்மகஸ்ஸந்த்யா காலம்:' என்று தம்முடைய க்ரந்தத்தில் இரண்டு நாழிகை காலம் என்று விசேஷித்துக் கூறுகிறார். ஸாயம் ஸந்த்யா காலமும் அவ்வளவே. மத்யாந்ந ஸந்த்யையின் காலம் 16-நாழிகை வரையில் உண்டு. அஹோ ராத்ரங்களின் ஸந்தி 'ஸந்த்யா' என்று முன் கூறிய விஷயம் ச்ருதியில் கூறப்படுகிறது. 'கஸ்ஸந்த்யாகாலம்: கிம் ஸந்த்யாயாஸ்ஸந்த்யாத்வம்' என்று ச்ருதிதானே ப்ரச்நம் செய்துகொண்டு; 'தஸ்மாத் ப்ராஹ்மணோ அஹோராத்ரஸ்ய ஸம்யோகே ஸந்த்யாமுபாஸீத ஸஜ்யோதிஷ்யா

ஜ்யோதிஷோ த்வம்ஸநாத் ஸோமஸ்ய ஸந்த்யாகாரஃ ஸ ஸந்த்யா தத்ஸந்த்யாயா ஸ்ஸந்த்யாத்வம்' என்று சொல்லுகிறது. 'ஸந்த்யா' என்னும் சப்தத்திற்கு ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் பகவானே பொருள் என்று கூறியிருப்பது பரமை காந்திகள் மிகவும் போற்றத்தக்கது. இப்படியே ஸந்த்யாவந்தந பாஷ்யத்திலும் உள்ளது. இவ்விஷயத்தில் அங்குக் கூறப்பட்ட ப்ரமாண வாக்ய மிதுவே. 'ஸம்ஸ்தாதா சைவ ஸர்வேஷாம் ஸந்த்யேதி பரிகீர்த்யதே'—லோகத்தில் பதார்த்தங்களை ஸந்தி பண்ணிச் சேர்த்துவைப்பவன் அவனன்றோ?

இக்கர்மாவானது இரு பாகமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகத்தில் மந்த்ரங்களுடன் கூடியவைகளான ப்ரோக்ஷணம் ஆசமநம் புந: ப்ரோக்ஷணம் இவைகளும், பிறகு முக்யமான அர்க்யதாநமும், நாழிகை கடந்தால் ப்ராயச்சித்தமும், ஆத்ம ப்ரதக்ஷிணமும், கேசவாதி தர்ப்பணங்களும் அடங்கியுள்ளன. பிற்பகுதியில் பெரியகாயத்ரியின் ப்ராணாயாம ஜபங்களும் காயத்ரியின் ஜபமும் உபஸ்தாநமும் இருக்கின்றன. ப்ரயோக க்ரமத்தைப் பெரியோர்களிடம் கேட்டுத் தெளியலாம். ஒரு கர்மாவை ப்ரமாணம் அங்கம் முதலியவைகளுடன் அறிந்து செய்வது உத்தமம். பிறரைப் பின்பற்றி ஸ்வயம் புத்தியில்லாமல் கர்மாக்களைச் செய்தால் பிசகு நேரிடலாம். ஆகையால் இந்த ஸந்த்யோபாஸந விஷயத்தில்—அதிலும் முக்யமாக அர்க்யம் ஸமர்ப்பிக்கும் விஷயத்தில்—ச்ருதி சொல்லும் ஒரு கதை இங்கு மிகவும் பொருத்தமாயிருக்குமென்று நினைத்து அதை எழுதுகிறோம்.

தைத்தரீயாரண்யகம் இரண்டாவது ப்ரச்நம் சொல்லுகிறது:—'ரக்ஷாம்ஸி ஹ வா புரோநுவாகே தபோऽதப்யந்த'— முன்னாளில் ராக்ஷஸர்கள் உயர்ந்த தபஸ்ஸைச் செய்தனர். 'தான் ப்ரஜாபதிர்வரேணோபாமந்த்ரயத'—அவர்களை ப்ரஜாபதி ரஹஸ்யத்தில் வரங் கொடுப்பதாய் ஸமாதாநம் செய்தார். 'தாநி வரமாவ்ருணீதாதித்யோ நோ யோத்தேதி'—அவர்கள் ஸூர்யன் எங்களிடம் சண்டையிடட்டும் என்று வரம் கேட்டனர். 'தான் ப்ரஜாபதிரப்ரவீத்யோதயத்வமிதி'—அவர்களிடம் ப்ரஜாபதியும் 'நீங்கள் சண்டையிடுங்கள்' என்று சொன்னார். 'தஸ்மாதுத்திஷ்டந்தம் ஹ வா தாநி ரக்ஷாம்ஸ்யாதித்யம் யோதயந்தி யாவதஸ்தமந்வகாத்'—அதனால் அந்த ராக்ஷஸர்கள் ஸூர்யனிடம் உதயம் முதல் அஸ்தமநம் வரையில் சண்டையிடுகின்றனர். 'தாநி ஹ வா ஏதாநி ரக்ஷாம்ஸி காயத்ரியாபிமந்த்ரிதேநாம்பஸா சாம்யந்தி'—அந்த இவ்விராக்ஷஸர்கள் காயத்ரியினால் அபிமந்த்ரிக்கப்பட்ட ஜலத்தினால் (மேல்நோக்கி இறைக்கப்பட்டதினால்) அடங்கி விடுகிறார்கள். 'தது ஹ வா ஏதே ப்ரஹ்மவாதிந: பூர்வாபிமுகா: ஸந்த்யாயாம் காயத்ரியாபிமந்த்ரிதா ஆப ஊர்த்வம் விக்ஷிபந்தி'—அதனாலன்றோ இந்த வேத மறிந்தவர்கள் கிழக்கு முகமாய் ப்ராத:காலத்தில் நின்றுகொண்டு காயத்ரியினால் அபிமந்த்ரிக்கப்பட்ட ஜலத்தை மேலெழ இறைக்கிறார்கள். 'தா ஏதா ஆபோ வஜ்ரீபூத்வா தாநி ரக்ஷாம்ஸி மந்தேஹாருணே த்வீபே ப்ரக்ஷிபந்தி'—அந்த இஜ்ஜலங்கள் வஜ்ராயுதங்களாக மாறி அந்த ராக்ஷஸர்களை மந்தேஹர்களுடைய அருணம் என்னும் தீவில் தள்ளிவிடுகின்

றன. 'யத்ப்ரதக்ஷிணம் ப்ரக்ரமந்தி தேந பாப்மாநமவதூந்வந்தி'—(இந்த ஸமயத்தில்) யாதொரு ப்ரதக்ஷிணம் செய்கிறார்களோ அதனால் பாபங்களைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். 'உத்யந்தமஸ்தம்யந்தமாதித்யமபித்யாயந் குர்வந் ப்ராஹ்மணோ வித்வாந் ஸகலம் பத்ரமச்நுதேஸாவாதித்யோ ப்ரஹ்மேதி'— உதித்துக்கொண்டும் அஸ்தமித்துக்கொண்டும் இருக்கிற ஸூர்யனை இவ்வாதித்யனே ப்ரஹ்மம் என்று எதிரில் பாவித்துச் செய்யும் அறிவுள்ள ப்ராஹ்மணன் ஸகல க்ஷேமத்தையும் அடைகிறான்—என்றிப்படி ச்ருதி ஸந்த்யாவந்தநத்தை அதிலும் முக்யமான அர்க்ய தாநத்தை விதிக்கிறது. அர்க்ய தாநத்தின் பலமும் அதிலேயே கூறப்பட்டிருக்கிறது. அது செய்யாவிடில் ராக்ஷஸர்கள் ஸூர்யனைப் பீடிப்பர்களாம். நாம் மேலிறைக்கும் அர்க்ய ஜலம் அவர்களைத் துரத்தி விடுகிறதாம்.

பிதாமஹர் சொல்வதைக் கவனியுங்கள் :—'ஸ ஹந்தி ஸூர்யம் ஸந்த்யாயாம் நோபாஸ்திம் குருதே து ய: | ஸ ஹிம்ஸதி ஸதா ஸூர்யம் மோக்ஷத்வாரமநுத்தமம் | கதம் மோக்ஷஸ்ய ஸம்ப்ராப்திர்பவேத்தேஷாம் த்விஜந்மநாம் ||' ஸந்த்யோபாஸநத்தில் அர்க்ய தாநம் செய்தால் ஸூர்யனுக்கு ராக்ஷஸ பீடை இல்லாமல் ஒழிகிறது. ஆகையால் எவனொருவன் ஸந்த்யையை உபாஸிக்கவில்லையோ, அவன் ஸூர்யனை ராக்ஷஸ பீடைக்கு உள்ளாக்குகிறான். மோக்ஷத்திற்கு வாயிலாகிய ஸூர்யனை உபேக்ஷித்துப் பீடைக்கு உட்படுத்துமவனுக்கு மோக்ஷம் எப்படி கைகூடும் என்று. 'ஸந்த்யாஹீநோசுசிர்நித்யமநர்ஹஸ்ஸர்வகர்மஸு | யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய பலமச்நுதே ||' என்கிற தக்ஷ வசநத்தினால், ஸந்த்யோபாஸநமானது, இதர ஸர்வ கர்மாக்களையும் செய்வதற்கு யோக்யதையைக் கொடுக்கிறதென்றும், இது இல்லாவிடில் மற்றவைகளைச் செய்யினும் அவை பலிக்கா என்றும் தேறுகிறது.

ப்ராதஸ் ஸந்த்யையில் ஸூர்யன் உதிப்பதற்கு முன்பும், ஸாயம் ஸந்த்யையில் அவன் அஸ்தமிப்பதற்கு முன்பும், அர்க்ய தாநம் செய்யவேண்டும். இவ்வர்க்ய தாநமே இக்கர்மாவில் முக்யமான அம்சம். பிதாமஹர் மறுபடி 'அநாகதாம் து யே பூர்வாமநதீதாம் து பச்சிமாம் | ஸந்த்யாம் நோபாஸதே விப்ரா: கதம் தே ப்ராஹ்மணா: ஸ்ம்ருதா: |' என்று கூறுகிறார். ப்ராதஸ் ஸந்த்யையை வருவதற்கு முன்பேயும், ஸாயம் ஸந்த்யையைத் தாண்டிப்போவதற்கு முன்பேயும் அநுஷ்டிக்காதவர்கள் எப்படி ப்ராம்ஹணர்களாவார்கள் என்பது இதன் கருத்து. 'ஸந்த்யா வந்தநத்திற்குப் பிற்பாடரானவர்களை சிஷ்டர்கள் ஹை பண்ணுமாப்போலே' என்ற ஸ்ரீ ஸூக்தியை ஈட்டில் பல விடங்களிலும் காணலாம். தற்காலம் தலைக் குடுமியுடன் தெருவில் செல்லும் சிலரைத் தறிதலைகள் தட்டிக் கொட்டி ஆர்ப்பரித்து வைவதுபோல, அக்காலத்தில் ஸந்த்யோபாஸநம் பண்ண விளம்பித்தவனை விசிஷ்டர்களான சிஷ்டர்கள் வைவது ப்ரஸித்தம் போலும்.

'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத் தரவி னணையான்' என்ற திருப்பாணாழ்வார் ஸ்ரீ ஸூக்தி இங்கு ஸேவிக்கத்தக்கது. 'மந்திகள் பாய்ந்தோடும் வடவேங்கட மாமலையில், நித்ய ஸூரிகள் ஸ்வரூபத்திற்கு உசிதங்களான கைங்கர்யங்களைப் பண்ண உகந்து

வந்து நின்றான் அரங்கத் தரவி னணையான்' என்று ஸாதிக்கு மிடத்தே, எல்லாக் கைங்கர்யங்களையும் குறிக்கச் சந்தி என்னும் சப்தம் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. ஸந்த்யா என்பதையே 'சந்தி' என்று சுருக்கி, மற்ற கைங்கர்யங்களையும் உபலக்ஷித்தருளினார் என்று தோன்றுகிறது. இதிலிருந்து இதர ஸர்வ கர்மாக்களையும் விட ஸந்த்யோபாஸநமே முக்யமாய் முந்திச் செய்யவேண்டும் என்பதை லோகத்திற்கு உபதேசித்தருளினார் என்றதாயிற்று. ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய அந்திம தசையிலும் வருந்தி எழுந்திருந்து அர்க்ய ப்ரதாநம் செய்தருளினதாய் ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்தருளினார். த்யாகமென்பது இதுவே. இதுவே ஸ்வயநல மின்மை. ஆகையால் இக்கர்மாவை எல்லோரும் அவச்யம் செய்யவேண்டும். ஸம்ஸாரத்தில் நிற்கக்கூட நேரமில்லாமலும் சாப்பிடவும் ஸாவகாசம் இல்லாமலும் இருக்கலாம். ஐந்து நிமிஷங்கள் இதைச் செய்யப் போதுமானது. கொஞ்சம் அவகாசம் உள்ளவர்கள் வேறு கர்மாக்களையும் நித்யமாய்ச் செய்யவேண்டும். கலியுகத்திற்காகத் தர்ம ஸங்க்ரஹம் செய்த மஹர்ஷி,

"𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾 𑌜𑌪𑍋 𑌹𑍋𑌮𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌿𑌥𑌿𑌪𑍂𑌜𑌨𑍇 ।
𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌨 𑌯𑌜𑌨𑌂 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ॥"

என்று கூறுகிறார். அதாவது:—(1) ஸ்நாநம் செய்தல் (2) ஸந்த்யோபாஸநம் செய்தல் (3) மந்த்ர ஜபம் செய்தல் (4) அக்நிஹோத்ர ஔபாஸந ஹோமங்களை யதா சக்தி செய்தல் (5) பகவான் அதிதி இவர்களை ஆராதித்தல் (6) வைச்வதேவம் செய்தல்—ஆகிய இந்த ஆறு கர்மாக்களும் தினம் செய்யப்படவேண்டும். இவ்வாறு சாஸ்த்ரம் கட்டளையிடுகிறது. ஆகையால் அவகாசமுள்ளவர்கள் அவரவர் அவகாச தாரதம்யத்துக் கீடாக இவைகளைக் கூட்டியோ குறைத்தோ நித்யமாய்ச் செய்துவரவேண்டும் என்பது நமது ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, B.A., B.L., அட்வோகேட், திருச்சி]

ஐந்தாவது ஈக்ஷத்யதிகரணம்

இங்கே இந்த வேதாந்த மீமாம்ஸா ஶாஸ்த்ரம் தொடங்குகிறது. விச்வஸ்ருஷ்டியின் தொடக்கத்தைச் சாந்தோக்யத்தில் ஆறுவது ப்ரபாடகத்தில் ஸத்வித்யையில் வர்ணித்திருப்பதை விசாரிப்பதோடு, இங்கே தொடங்குவதில் விச்வஸ்ருஷ்டி ஆரம்பத்தில் '𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤' என்று பகவானுடைய சுபமான ஸங்கல்பத்தைக் கூறிய 'ஈக்ஷதி' ஶப்தத்தோடு இந்த வேதாந்த மஹா ஶாஸ்த்ரத்தை ஸூத்ரகாரர் தொடங்குவதில் பகவத் கடாக்ஷ வீக்ஷணத்தோடு மாங்களிகமாகத்

தொடங்குகிறார். ஜகத் ஸ்ருஷ்டி செய்வது, எல்லோரும் கரண களேபரங்கள் பெற்று ப்ரஹ்ம நிஷ்டராய் மோக்ஷம்பெற்றுத் தன் ப்ரஜைக ளெல்லாம் தன் வீடு வந்து சேர்ந்து சாச்வதப் பேரின்ப வாழ்வு பெறவேண்டு மென்பதை உத்தேசித்தே. 'தந்நிஷ்டருக்கு' மோக்ஷத்தை இந்த வித்யை உபதேசிப்பதை, இங்கே மூன்றாவது ஸூத்ரத்தில் ஸ்பஷ்டமாய்க் கூறுகிறார். ப்ரஹ்ம நிஷ்டையால் மோக்ஷம் ஸித்திக்கு மென்பதை சாஸ்த்ராரம்பத்திலேயே அறுதியிடுகிறார். 'ஈக்ஷதேः' என்பதை இந்த ஸூத்ரத்திலும் அந்வயித்துக்கொள்ளவேணும். ப்ரஹ்மநிஷ்டனுக்கு மோக்ஷம் ஈச்வரனுடைய ஈக்ஷண மென்னும் ஸங்கல்பத்தாலும் கடாக்ஷத்தாலும் ஸித்திக்கு மென்பதையும் காட்டுகிறார். 'ஹேதுः' என்று பின்னால் மூன்றாவது அத்யாயத்தில் 2-ம் பாத முடிவில் கூறப்படுவதை இங்கேயே ஆரம்பத்தில் ஸூசிக்கிறார். விச்வ ஸ்ருஷ்டியை ஸங்கல்பித்த ஈச்வரன் இந்த வேதாந்த சாஸ்த்ர நிர்மாணத்தையும் ஸங்கல்பித்து, அதன் மூலமாய்த் தொடங்குகிறார் என்கிற ஸாத்விகாநுஸந்தாநத்தையும் சாஸ்த்ராரம்பத்தில் ஸூத்ரகாரர் செய்கிறார். பராயத்த கர்த்ருத்வத்தை இரண்டாம் அத்யாயத்தில் ஸாதிக்கப்போவதை இங்கு ஸ்வாநுஷ்டாநத்தால் முதலிலேயே ஸூசித்துக்கொண்டு தொடங்குகிறார். 'ஶ்ரீகாமிஷிராமொஸைः ஸாய-ஶூயசைத்ரீ ஊரதொஉஜயிः' என்று ஸ்ரீ குணரத்நகோசத்தில் ஸாதித்தபடிக்கும், 'யஸ்ஶா வீக்ஷ்ஷ-ஊவஂ தஷிஂமித வராயீநः' என்று ஸ்ரீ ஸ்தவத்தில் ஸாதித்தபடிக்கும், 'ஐமஸீஉஷுஂயசுவாஜுஸஂரூயஂ' என்று ஸ்தோத்ரரத்நத்தில் ஸாதித்தபடிக்கும், ஜகத் ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜகமான கருணையே வடிவான 'ஸ்ரீயா' என்ற தேவியின் மங்கள கடாக்ஷோல்லாஸங்களும் சாஸ்த்ராரம்பத்தில் விச்வ ஸ்ருஷ்ட்யாரம்பத்திற்போல ஸ்மரிக்கப்படுகின்றன. தந்தர்ப்பாவ ந்யாயத்தை இங்கே நினைக்கவேணும். 'அருளினன்' என்று இங்கே முதலிலேயே ஆழ்வார் ஸ்பஷ்டமாகப் பாடுவதும், பகவானுடைய ஈக்ஷணத்தை எல்லா ச்ரேயஸ்ஸுக்கும் இந்த சாஸ்த்ரத்திற்கும் மூலமாக ஸூசிக்கிறது. 'மாலே யேறி மாலருளால்' என்று பாடுவதும் இதற்குச் சான்றாகும். விசிஷ்டாத்வைதத்தில் சாரீரக சாஸ்த்ரத்திற்கு நோக்கு என்பதை இந்த ஸத்வித்யை முக்யமாக எடுத்து விளக்குவது. அதனால் இந்த சாரீரக சாஸ்த்ரத்தை ஸத்வித்யையோடு தொடங்குவது மிக உசிதம். பல அதிகரணங்களில் இந்த ஸத்வித்தையின் பல பாகங்கள் விசாரிக்கப்படுகின்றன. இரண்டாவது அத்யாயம் முதல் பாதத்தில் ஆரம்பணாதிகரணத்தில், 'ஶத்ரூஉஂதகூ' என்பதற்கு முன் "வேதாந்தங்கள் ப்ரஹ்மவித் தல்லாதவனுக்கு த்வைத தர்சநமும், ப்ரஹ்மவித்துக்கு அத்வைத தர்சநமும் ஸஹஜம் என்பதை விளக்கிக்கொண்டு, சிதசித் ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் 'அநந்யத்வ' மென்னும் 'வேறில்லாமையே' தாத்விக மென்பதைக் காட்டுகின்றன. 'வாசாரஂஹணஂ விகாரொ நாஉயெயஂ' என்று காரணமான ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து கார்யமான ப்ரஹ்மாத்மக ஸகல ஜகத்தும் ஆரம்பிக்கப்பட்டு, நாம ரூப விபாகமற்று, ப்ரஹ்மத்தோடே பிரியாமல் தனிமையில்லாமல் ஒன்றியுள்ள சிதசித்துக்களோடு கூடிய ப்ரஹ்மமும் ஸ்ருஷ்ட்யாரம்பத்தில் நாமரூபங்களால் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, ஒவ்வொரு கார்யத்துக்குள்ளும் ப்ரஹ்மாநுப்ரவேசத்துடன் ஸர்வம் ப்ரஹ்மாத்மகமாய்ப் பிரிந்து விரிந்

திருக்கும் கார்ய சிதசித்துக்களோடு கூடிய ப்ரஹ்மமும் 'அநந்யம்' [வேறல்ல ஒன்றே] என்று விஸிஷ்டங்களுக்கு அத்வைதம் ஸமர்த்திதமாகிறது'' என்று ஸாதித்து அதையே மேலும் விவரிக்கிறது. இந்த ஸத்வித்யையில், 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம், தத் ஸத்யம்' என்று சேதநாசேதநமான கார்ய ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மாத்மகமே என்பது, 'திண்ணம் திண்ணம்' என்று ஒன்பது தரம் த்ருஷ்டாந்த ப்ரதர்ஸநத்தோடு தகப்பனைக்கொண்டு புத்ரனுக்கு அறுதியிட்டு விச்வம் முழுவதையும் ஏகரூபமாய் ப்ரஹ்ம ப்ரகாரமாக ப்ரஹ்மாத்மகமாக ஒருயிரும் உடலுமாக ஒன்றுபடுத்திக் காட்டியிருக்கிறது. வேதாந்தம் காட்டும் 'ஸர்வ விசிஷ்ட ஏகத்வம்' எனும் இப்பாடமே புத்ரன்போன்ற சீடருக்குப் பயிற்சி செய்விக்கப்படவேணும். ஸ்ரீ சங்கரரும் பல விடங்களில் சிதசித் ப்ரக்ருதிகளென்னும் உடல்களோடு (விசேஷணங்களோடு) கூடிய ஈச்வரன் தான் ஜகத்துக்குக் காரண மென்றும், ஜகத் ரூபமாக விரிந்துள்ளா னென்றும் வேதாந்தங்களின் கருத்தெனக் கூறியுள்ளார். கீதாபாஷ்யத்தில் பதின்மூன்றுவது அத்யாயாயத்தில் 'ப்ருக்ருதி புருஷன் என்ற இரண்டையும் அநாதி யென்று அறி' என்கிற ச்லோக விவரணத்தில்,

"ப்ரக்ருதித்வயவத்த்வேவ ஹிம்ஸம்ஸாரஸ்யம் ஸம்ஸாரத்வம், யாவத்ராம் ப்ரக்ருதி ஸ்த்ராம் ஸம்ஸார: ஜகதுத்பத்திஸ்திதி ப்ரளயஹேதவ: । தே ச அநாதீ ஸம்ஸாரஸ்ய காரணம் । நித்யஸ்வாதீநஸ்ய தத்த்வஜ்ஞாநாவிவக்தம் நித்ய சைதந்யவிதாவ ॥"

என்று விஸிஷ்ட காரணத்வத்தையே அறுதியிட்டு விஸேஷணங்களான சிதசித்துக்களும் நித்ய மென்று பகவானுடைய நிர்ணயமாக நிர்ணயித்திருக்கிறார். எல்லோரும் சிதசித் விஸிஷ்ட ப்ரஹ்மமே காரண மென்றும், ஸமஸ்த சிதசித் ப்ரபஞ்சமும் ப்ரஹ்மாத்மகமாய் ஏக ப்ரகார மென்றும், விஸிஷ்டாத்வைத தத்வத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வது இந்த ஸத்வித்யை. அதை யிட்டு ஸூத்ரகார் ஸாரீரக ஸாஸ்த்ராரம்பத்திலேயே இதை எடுத்து விசாரிக்கிறார். இங்கே 'ஈக்ஷதே:' என்று ஈக்ஷணத்தோடு தொடங்குவதில், ஏழாவது த்ருஷ்டாந்தமாகிய 'புருஷகந்தார' த்ருஷ்டாந்தத்தில் கண்ணைக் கட்டி விடப்பட்டு ஸம்ஸாரக் காட்டில் ஜ்ஞாநாந்தனாய்த் திரிந்து திண்டாடுபவனைக் கடாக்ஷித்த காருணிகனான ஆசார்யன், அநாதி காலமாய் மூடியிருந்த கண்ணைத் திறந்து விட்டு, இவனைக் குளிரக் கடாக்ஷித்து ஜ்ஞாந மளித்து, அவன் காட்டும் ப்ரஹ்மத்தினிடத்தில் நிஷ்டனாய், 'விமோக்ஷ்யே, அத ஸம்பத்ஸ்யே' என்றபடி மோக்ஷத்திற்கு யோக்யதையைப் பெறுவதை உபதேசிக்கப்பட்டதை ஸூசித்து, ஆசார்ய வீக்ஷணத்தால் 'ஸத்' என்னும் ப்ரஹ்மத்தில் நிஷ்டையும், அதனால் மோக்ஷப் பேறும் ஸித்திப்பதையுங் காட்டி, ஆசார்ய வீக்ஷணத்தையும் ஸூசிக்கிறது என்பதும் ரஸிக்கத்தக்கது. 'விஷ்ணோ: கடாக்ஷ்ச்சத்வேஷ:' என்று தொடங்கி ஆசார்ய கடாக்ஷ ப்ராப்தி ஹேதுக்களில் முதலில் ப்ரஹ்ம கடாக்ஷமும், கடைசியில் ஆசார்ய கடாக்ஷமும், பிறகு அதற்கு ப்ரயோஜநமாக ப்ரஹ்மத்தின் மோக்ஷண கடாக்ஷ ஸித்தியும், 'ஈக்ஷதே:' என்கிற முதல்

ஹேது பதத்தால் ப்ரக்ருத ஸத்வித்யையைக் கொண்டே வேதாந்த ஶாஸ்த்ராரம்பத்தில் ஸூத்ரகாரர் ஸூசிக்கிறுர்போலும்.

'மனனக மலமற மலர்மிசை யெழுதரும், மனனுணர் வளவிலன்' என்கிற முதலடியில் சித் வைலக்ஷண்யத்தைக் காட்டும் ஆநந்தமயாதிகரணத்தையும், 'பொறியுணர் வவையிலன்' என்ற இரண்டாம் அடியில் காரணத்திற்கு அசித் வைலக்ஷண்யத்தைச் சொல்லும் ஈக்ஷத்யதிகரணத்தையும் ஸூசிப்பதாகவும் ஓர் யோஜனையை முன்பே காட்டியுள்ளோம். 'மனனே' என்கிற முதல் பாசுரத்தின் கடையிலுள்ள 'மனன்' பதத்தை ஆதியாகக் கொள்ள வேண்டிய அந்தாதி நிர்ப்பந்தத்தால் வ்யத்யஸ்த க்ரமத்தால் இவ்விரண்டடிகளில் இவ்விரண்டு அதிகரணங்களையும் ஸூசித்ததாகச் சொல்லலாம். இம்முதலடியிலேயே இந்த ஈக்ஷத்யதிகரணத்தின் ஸாரங்களை ஸங்க்ரஹித்துக் காட்டுவதாகவும் ஆழ்வார் ஸூத்ர க்ரமத்தையே ஆதரிப்பதாகவும் சொல்லலா மென்றும் தோன்றுகிறது. இந்த அதிகரணத்தில் ஸாங்க்யர்கள் ஸத்வித்யையில் சொன்ன ஜகத்காரணமான 'ஸத்' ஸாங்க்ய மதத்தில் அநுமாநத்தால் அசேதந முக்குணமான ஜகத்திற்கு த்ரிகுணமான ஸூக்ஷ்ம ஜடமூல ப்ரக்ருதிதான் காரணமாயிருக்கவேண்டு மென்று அநுமானித்த ப்ரக்ருதியைத்தான் ஜகத்காரணமாக அநுவாதம் செய்யப்படுகிற தென்றும், மண் முதலிய காரணப் பொருள் த்ருஷ்டாந்தங்கள் ஜடமான மூல ப்ரக்ருதிக்கே பொருந்து மென்றும், 'ஸத் ஸ்ருஷ்டிக்கப் பார்த்தது' என்று சொல்லுவது 'சுவர் விழப் பார்க்கிறது' என்றதுபோல் கௌண மென்றும் கக்ஷி சொல்வதை விலக்கி, இங்கே 'ஸத்' என்பது சேதநமான ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மமே என்றும், ஈக்ஷணபூர்வகமாய், 'நான் அநேகமாக ஆவேன்' என்று நினைத்துக்கொண்டு ஸ்ருஷ்டிப்பது அசேதந ப்ரக்ருதிக்குப் பொருந்தா தென்றும், ஆத்மா வென்று உள்ளே ப்ரவேசித்து உயிராயிருந்து நியமிப்பது ஜடத்திற்குப் பொருந்தா தென்றும், அசேதநமான ப்ரக்ருதி நிஷ்டனுக்கு மோக்ஷம் ஸித்திப்ப தென்பது ஸாங்க்யருக்கும் அநிஷ்ட மென்றும், ப்ரக்ருதியை விட்டுப் பிரிந்து தனிப்படுவதே மோக்ஷமென்ற அவர்கள் மதத்திற்கு இங்கே சொல்லப்படும் ஸத் தென்னும் காரணத்தில் நிஷ்டை மோக்ஷம் தருவதென்று கூறியிருப்பது விருத்த மென்றும், ஒருவித லயமான நித்ரையில் ஸத் தென்னும் காரணப் பொருளுக்குள் ஜீவன் மனம் முதலிய ஸகல கரணங்களும் ஒடுங்கி லயித்து மெய்ம்மறந்து தூங்குகிறு னென்பது ஜட ப்ரக்ருதியில் லயித்து ஒன்று சேர்ந்து தூங்குவதாகச் சொல்ல முடியா தென்றும், காரணத்திலேதான் லயம் ஸம்பவிக்கக்கூடு மென்றும், ஸாங்க்ய மதப்படிக்கும் ஜீவர்களுக்கு மூல ப்ரக்ருதி காரணமல்ல வென்றும், இங்கே அநுமாநத்திற்கு முக்யமான அவயவமான 'ஹேது' குறிக்கப்படாததால் உபநிஷத்து இங்கே அநுமாந முறையை ஆதரிக்கவில்லை யென்றும் ஸித்தாந்த யுக்திகள் கூறப்படுகின்றன.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

க்ருதஜ்ஞதாநுஸந்தாநம்

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., மேல் மாம்பலம்]

இப்போது ஸ்ரீமத் அஹோபில மடம் மஹாஸ்தாநத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ அழகிய சிங்கரை எல்லாரும் பலவிதமாகப் போற்றுகிறார்கள். இவரை எல்லாரும் உதாரகுண சீலர் என்றும், விதரணை தெரிந்த மஹாபுருஷன் என்றும், ஓர் அவதார புருஷர் என்றும் கொண்டாடுகிறார்கள். விஷய மறிந்தவர்கள் 'இவர் ஸாக்ஷாத் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விபவரூபமேதான்' என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு எல்லாருமே ஒருமுகமாக இவரைக் கொண்டாடுவதற்குக் காரணம் என்ன ?

இந்த மடம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 550 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிதமாயிற்று. இதை ஸ்தாபித்த மஹானுக்கு 'ஸ்ரீமத் ஆதிவண் சடகோப யதீந்த்ரர்' என்பது திருநாமம். அவரும், அவருக்குப் பின்னால் இந்த ஆஸ்தாநத்தை அலங்கரித்தருளிய ஸ்ரீ அழகிய சிங்கர்களும், ஸம்ப்ரதாயக் கலையும் கலாசாரமும் தழைத்து வளரும் வண்ணம் செய்தருளிய கைங்கர்யங்கள் எண்ணிலடங்கா. அவை பல திறப்பட்டவை. ஒவ்வொன்றும் ஆச்சர்யகரமானது; நெஞ்சை அள்ளும் விதமாக விளங்குவது. இத்தகைய பெரிய மஹான்களுடைய பரம்பரையில் எழுந்தருளியவர் ஸ்ரீ அழகியசிங்கர். எனவே இவர் அவர்களைப்போலவும், அவர்களை விஞ்சும் வண்ணமும், பல கைங்கர்யங்களைச் செய்து அந்யாத்ருசமான கீர்த்தியை ஸம்பாதித்துக்கொண்டதில் வியப்பில்லை. 'இவர் ஸநாதநமான நமது ஸம்ப்ரதாயம் தழைத்து வளர என்னதான் செய்துவிட்டார் ?' என்று கேட்கலாம். இது ந்யாயமான கேள்விதான். நவநாகரீகத்தின் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டு, சாஸ்த்ரங்களில் மிகவும் அவசியம் என்று கூறப்பட்டுள்ள தலையில சிகையைத் தரிப்பது, நெற்றியில் புண்ட்ரம் இடுவது, ஸ்நாநம் ஸந்த்யை முதலியவற்றை க்ரமப்படி அநுஷ்டிப்பது முதலிய வைதிக சிந்நங்களையும் கர்மாக்களையும் விட்டுவிட்ட ஜனங்களை அவரவர்களுக்கு ஏற்ற முறையில் போதித்து நல்ல மார்க்கத்துக்குத் திருப்பியதும் திருப்பிவருவதும் ஓர் உயர்ந்த தொண்டல்லவா ? ஸம்ப்ரதாயக் கல்வியை மிகவும் பரிச்ரமப்பட்டு அதிகரித்த வித்வான்கள், தங்கள் சரீர யாத்ரையை நடத்துவதற்கு ச்ரமப்படாமல் கூடியவரையில் அவர்களுக்கு உதவிபுரிவது ஓர் உயர்ந்த கைங்கரியம் அல்லவா ? ஸ்ரீ அழகியசிங்கர், தாம் ஒரு பெரிய மஹாஸ்தாநத்துக்கு நிர்வாஹகராக இருந்து, அதனால் நிர்வாஹ விஷயமான பல பெரிய ப்ரச்னைகளைக் கவனிக்கவேண்டியிருப்பதால், மற்றைய விஷயங்களுக்கு அவகாசமே இல்லாமலிருக்கும்போதும், நியதமாகத் தினமும் தர்சந க்ரந்தங்களை ஸச்சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதில் கொஞ்சமும் தவிராமலிருப்

பது ஓர் உயர்ந்த தொண்டல்லவா? இவை யெல்லாம் ஸ்ரீ அழகியசிங்கர் செய்துவரும் கார்யங்கள்தான். ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வளவுதான் செய்துள்ளாரா? இன்னும் எவ்வளவோ கைங்கரியங்களைச் செய்தருளியுள்ளார். அதனுல்தான் இந்த ஸ்ரீ மடத்தின் சிஷ்யர்கள், தாங்கள் இந்த மஹாபுருஷனுடைய சிஷ்யர்களாக இருக்கும் பாக்யம் கிடைத்ததைப்பற்றி மட்டில்லாத மகிழ்ச்சி யடைந்துள்ளார்கள். இவர் இத்தகைய உபகாரங்களைச் செய்துவருவதற்கு நிதானமாக இருப்பவை, இவருடைய பரோபகார சிந்தையும் விசாலமான திருவுள்ளமுமே. இவருக்கு ஊக்கங்கொடுத்து வருபவை, ப்ராசீநமான கலாசாரங்களை ரக்ஷிப்பதிலும் அவற்றைத் தழைக்கச் செய்வதிலும் உள்ள த்வரையும், ஸம்ப்ரதாயத்தில் உள்ள ஊற்றமும் ஆகும். இவர் இத்தகைய குணச்சிறப்புடையவராக இருப்பதால்தான், மிகவும் ச்ரம ஸாத்யமும் மிகுந்த த்ரவ்யத்தினுல் மாத்ரம் ஸாத்யமுமான பல அரிய காரியங்களையும் நிறைவேற்றியுள்ளார். இவ்வண்ணம் இவர் செய்தருளியுள்ள மஹத்தான காரியங்களுள் ஒன்றிரண்டைப்பற்றி நாம் அநுஸந்திப்பது மிகையாகாது.

இவருடைய உயர்ந்த கைங்கர்யங்களைப்பற்றிச் சிந்திக்கும்போது, முதல்முதல் நமது கவனத்துக்கு வருவது, இவரால் ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத கலாசாலைதான். இது ஒரு ஸம்ஸ்க்ருத கலாசாலை மாத்ர மல்ல. இது ஒரு ஸம்ப்ரதாயக் கலாசாலையாகவும் இருக்கிறது. ஸமீப காலத்தில் தேவ பாஷையான ஸம்ஸ்க்ருதம் எல்லாராலும் அநாதரிக்கப்பட்டுவிட்டது. நமது ஹிந்து நாகரீகத்தையும் பண்பாட்டையும் ஸம்ஸ்க்ருத் பாஷைதான் இதுவரையில் ஒரு கோவிலாக இருந்து ரக்ஷித்துவந்தது. நமது பண்டைப் பெருமைக்குச் சான்ருக விளங்கும் வேதங்களும், மற்ற ஶாஸ்த்ரங்களும் ஸம்ஸ்க்ருதத்தில்தான் இருக்கின்றன. ஆத்மோஜ்ஜீவநத்தை நாடும் முமுக்ஷுக்கள் ஸம்ஸ்க்ருதம் தெரியாமல், வேதாந்த விசாரமோ அல்லது ப்ரஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தங்களின் பரிசீலனையோ எவ்வண்ணம் செய்ய முடியும்? சாஸ்த்ரங்கள், புதிதாக ஒரு கோவில் கட்டுவதைக்காட்டிலும், ப்ராசீநமான ஒரு கோயிலைப் பாழடையாமல் ரக்ஷிப்பது சிறந்த தர்மம் என்று பறை சாற்றுகின்றன. கோவி லென்பது எம்பெருமான் திவ்யமங்கள விக்ரஹத்தோடு எழுந்தருளியிருந்து ஸேவை ஸாதித்தருளும் ஸுதையினுல் (சுண்ணும்பினுல்) ஆகியது மாத்ர மன்று. ஸம்ப்ரதாய ஸுதையினுல் (அம்ருதத்தினுல்) ஆகிய வேதங்கள், ஸ்ரீமத் ராமாயணம், சாஸ்த்ரங்கள் முதலியவைகளும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோவில்கள்தான். இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருக்கும் ஸம்ஸ்க்ருத பாஷையை ரக்ஷிப்பது, ஆயிரம் கோவில்களைப் பழுதுபார்த்து ரக்ஷிப்பதற்கு ஸமானம் என்ருல் மிகையாகாது. இத்தகைய ஓர் உயர்ந்த கைங்கர்யத்தை ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளியுள்ளார்.

இப்பொழுது நமது தேசத்தில் ஏற்பட்டுள்ள புதிய கல்வி முறையில், ஸம்ஸ்க்ருத பாஷைக்கு ஓர் உயர்ந்த ஸ்தாநமோ கௌரவமான இடமோ

கொடுக்கப்படவில்லை. மிகவும் ப்ரயாஸத்துடன் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்ற வித்வான்களுக்கு, ஆதரிப்பா ரின்மையால், சரீர யாத்ரை நடப்பதே கஷ்டமாக இருக்கிறது. இத்தகைய நிலைமையில் ஸம்ஸ்க்ருதத்துக்கு ஏற்பட்டிருந்த ப்ரசாரம் வரவரக் குறையக் கேட்கவேண்டுமா? பாஷை ஸ்வயமாக எவ்வளவு தான் சிறப்புடையதாக இருந்தால் என்ன? அதன் ப்ரசாரம் வரவரக் குறையும்போது, அது எவ்வாறு நெடுநாள் தலைதூக்கி நிற்க முடியும்? இந்த நிலைமையில் ஸ்ரீ அழகியசிங்கர் மதுராந்தகத்தில் ஸ்தாபித்த ஸம்ஸ்க்ருத கலாசாலை, உண்மையில் ஸம்ஸ்க்ருத பாஷைக்கு ஒரு புகலிட மாயிற்றென்றால் அதில் தவறில்லை. இந்தக் கலாசாலையின் உண்மையான உபகாரத்துக்கு, இனி வரப்போகும் காலம்தான் ஸாக்ஷி சொல்லப்போகிறது. ஸ்ரீ அழகியசிங்கர் இந்தக் கலாசாலைக்கு மிகவும் ஏற்ற இடம் ஸ்ரீ மதுராந்தக க்ஷேத்ரம்தான் என்று திருவுள்ளம்பற்றியதிலும் காரண மில்லாம லில்லை. ஸ்ரீ அழகியசிங்கருக்கு இந்த க்ஷேத்ரம் தமது ஆசாரியனுடைய ஸம்பந்தம் பெற்றதென்கிற பஹுமானம் உண்டு. இதோடுகூட இந்த க்ஷேத்ரம் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய உள்ளத்தில் பக்தியையும் பஹுமானத்தையும் மூட்டக்கூடிய ஐதிஹ்யங்களோடு கூடியது. இதைப்பற்றிய ப்ரஸ்தாவம் வரும்போதெல்லாம் அவர்களுடைய உள்ளத்தில் ஓர் கிளர்ச்சி யுண்டாகிறது. இந்த க்ஷேத்ரத்தை ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பண்ணவிட்டாலும், இதில் நமது ஆசார்யர்கள் அனைவரும் ஒருமுகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஏரிகாத்த பெருமாள் என்று மிகவும் ப்ரஸித்திபெற்ற ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஏரி உடைப் பெடுத்து ஊரை அழிக்காமல் காத்த பெருமையோடுகூட, ஸம்ப்ரதாயமாகிற அமுத ஏரியையும் காத்து ரக்ஷித்த பெருமையைப் பெற்றவர். ப்ரம்ஹஸூத்ரங்களுக்கு ஸ்ரீ விசிஷ்டாத்வைத தர்சந ரீதியில் ஸ்ரீமத் பாஷ்யம் அருளிச்செய்தவரும், தர்சந ஸ்தாபகர் என்று ப்ரஸித்தி பெற்றவருமாகிய ஸ்ரீ பகவத் ராமாநுஜன், இங்குத்தான் தம்முடைய ஆசார்யராகிய பெரிய நம்பிகளை ஸந்தித்து, அவரிடம் பஞ்ச ஸம்ஸ்காரமும் மந்த்ரோபதேசமும் பெற்று, தமது ஆத்மரக்ஷாபரத்தை எம்பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பணம் செய்ய அடிகோலினார். ஆகையால் இந்த க்ஷேத்ரத்தை 'த்வயம் விளைந்த திருப்பதி' என்று கொண்டாடுவார்கள். த்வயமாவது, பகவானுக்கும் நமக்கு முள்ள உறவைக் காட்டுவதும், பகவானிடம் நாம் பரஸமர்ப்பணம் செய்துகொள்ளும்போது அநுஸந்திப்பதும், மந்த்ரரத்நம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதுமான ஓர் உயர்ந்த மந்த்ரம். இந்த மந்த்ரம் ஸ்ரீ பகவத் ராமாநுஜனுக்கு அவருடைய ஆசார்யரால் இங்கு உபதேசிக்கப்பட்டது. இவ்வளவு சிறப்புப் பொருந்திய ஸ்ரீமதுராந்தக க்ஷேத்ரத்தில்தான் ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்ஸ்க்ருத ஸம்ப்ரதாய கலாசாலையை நிறுவியுள்ளார். இங்குச் சிறுவர்களுக்கு ஸம்ப்ரதாயக் கல்வியும், தேவபாஷையில் தேர்ச்சியும் கொடுக்கப்படுகின்றன. மற்ற மதஸ்தர்களுக்கு இல்லாமல் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மாத்ரம் கிடைத்துள்ள தனிப் பெருமை, அவர்களுக்கு ஸம்ப்ரதாய பரம்பரையாகக் கிடைத்துள்ள உபய வேதாந்தத்தினால் ஏற்பட்டுள்ளது. மறைகளாகிய வேதங்கள் சிறப்புடையவை யென்றால், தெளியாத

மறைநிலங்களையும் தெளிவிக்கும் திவ்யப்ரபந்தங்கள் இன்னும் அதிகச் சிறப்புடையவை யாகும். இவ்வாறு நமது ஸம்ப்ரதாயத்தின் பெருமைக்குக் காரணமாக விளங்கும் வேதங்களும் திவ்யப்ரபந்தங்களும் இந்தக் கலாசாலையில் தனித்தனியாக உபாத்யாயர்களைக்கொண்டு தகுதியுடைய சிறுவர்களுக்குப் போதிக்கப்பட்டுவருகின்றன. இன்னும் இங்கு வேதாந்த வித்தையை அதிகரிக்க அடிப்படையான ந்யாய சாஸ்த்ரம், வ்யாகரண சாஸ்த்ரம், முதலியவற்றில் த்ருடமான ஞானத்தை உண்டுபண்ணி, இவற்றில் ஸர்க்காரால் நடத்தப்படும் சிரோமணி பரீக்ஷைக்கு மாணவர்களைத் தயார் செய்கிறார்கள். ஸம்ஸ்க்ருதம் கற்கும் ஏழைச் சிறுவர்களுடைய எல்லா விதமான தேவைகளையும் பூர்த்திசெய்து, உபாத்யாயர்களுக்கும் குறைவில்லாதபடி சம்பளம் கொடுத்து, ஸம்ஸ்க்ருதக் கலையை உத்தாரணம் செய்யும் ஸ்ரீ அழகியசிங்கரைப் பற்றி நினைக்கும்போது, பாதாளத்தில் அழுந்திப்போன பூமிதேவியை மேலே தூக்கிவந்து உத்தாரணம் செய்த ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாளுடைய நினைவுதான் வருகிறது. இந்த ஸ்ரீவராஹநயினார் ப்ரம்ஹாண்டமான உருவம் எடுத்து, எல்லா அளவுகளையும் கடந்து நிகரற்று விளங்கியதுபோலவே, ஸ்ரீ அழகியசிங்கரும் எங்கும் பரந்த மிகுந்த கீர்த்தியோடு, தமக்காரும் நிகரில்லாமல் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீ அழகியசிங்கர் வேறு ஒரு விதமான உபகாரமும் செய்யாமலே இருந்திருந்தால்கூட, இந்தக் கலாசாலையை நிறுவிய பெருமையாலேயே அவருக்கு அழிவில்லாது நிலைநிற்கும் பெரும் புகழ் உண்டு. அவரை எல்லாரும் மிகவும் கொண்டாடுவார்கள். ஆனால் ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வளவோடு நிற்கவில்லை. இன்னும் ஒருபடி மேலே போனார். உலகத்தையே ப்ரமிக்க வைக்கும்படியான மற்றொரு கைங்கர்யமும் செய்து ஸ்ரீ அஹோபில மடத்தின் பெருமையை வானளாவ உயர்த்தினார்.

இந்த உயர்ந்த கைங்கர்யம் என்ன? ப்ரதி வர்ஷமும் தை மாஸத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் கூட்டுகிற 'ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்'தான். ஆயிரக்கணக்காக ரூபாய் செலவுசெய்து, பரிகணிதர்களான விசிஷ்டாத்வைத வித்வான்களையெல்லாம் அழைத்து, அவர்களைக்கொண்டு பத்து நாள் வரையில் ஸம்ப்ரதாய விஷயங்களாகவும் ஸித்தாந்த விஷயமாகவும் பல சர்ச்சைகளும் வாதங்களும் நடத்தி, எல்லாருக்கும் பரமானந்தத்தைக் கொடுக்கும் வண்ணம் இந்த வித்வத் ஸதஸ்ஸை ஸ்ரீ அழகியசிங்கர் நடத்திவருகிறார். "இந்த ஸதஸ்ஸினால் ஸம்ப்ரதாயத்துக்கு என்ன நன்மை உண்டாகிவிட்டது? இதனால் மடத்துக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு. யாரோ சில வித்வான்கள் மடத்துக்குப் போய்ச் சில விஷயங்களில் வாக்யார்த்தம் சொல்லிவிட்டு ஸ்ரீ அழகியசிங்கரிடமிருந்து சால்வைகளையும் ஸம்பாவனைகளையும் பெற்றுக்கொண்டு போய் விடுகிறார்கள். இதனால் நமது ஸம்ப்ரதாயம் தழைக்கும்படியான பலன் என்ன ஏற்படுகிறது?" என்று குற்றம் சொல்லுகிறவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகையால் இந்த ஸதஸ்ஸினால் நமது ஸம்ப்ரதாயத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றியும் கொஞ்சம் விசாரிக்கவேண்டியதாகத்தான் இருக்கிறது. எனவே அதைச் சற்று விசாரிப்போம்.

ஸ்ரீ அழகியசிங்கர் செய்துள்ள பலதிறப்பட்ட உபகாரங்களில் இந்த வித்வத் ஸதஸ் மிகவும் சிறந்ததென்பது கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நன்கு புலனாகும். இதனால் ஏற்படும் பலனைக் கணிசித்துப் பார்த்தால் இதற்காகச் செலவழிக்கப்படும் தொகை மிகவும் உபயோகமான செலவுதான் என்றும் தெரியும். இந்த வித்வத் ஸதஸ்ஸினால் ஏற்படும் முக்யமான பலன், ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்தத்தைக் காலக்ஷேபம் பண்ணி அதில் த்ருடமான ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்ளுமாறு எல்லாரையும் ஊக்கிவருவதுதான். ஸ்ரீ அழகியசிங்கர் இந்த வித்வத் ஸதஸ்ஸை ஆரம்பித்து வைக்கும் முன்பு, ஸ்ரீமத் பாஷ்யம் காலக்ஷேபம்பண்ணி சாற்றுமறை பண்ணியவர்களே மிகவும் குறைவு. அதிலும் ஸ்ரீபாஷ்யத்தைப் பல தடவைகள் ஸேவித்து அதில் நல்ல ஞானம் ஸம்பாதித்துக்கொண்டவர்கள் இன்னும் குறைவு. ஆக்ஷேபனைகளுக்கு ஸமாதானம் சொல்லி தர்சநத்தை ரக்ஷிக்கும் வகையில் வாக்யார்த்தம் சொல்லி வாதம் செய்யக்கூடியவர்கள் மிகமிகக் குறைவு. இதற்குக் காரணங்கள் பல. வேதாந்தம் ஆத்மார்த்தமான விஷய மாகையால், ஸ்ரீ வைஷ்ணவர்கள், இதைக் கலாசாலைகளில் யாரிடமாவது படித்து ஶிரோமணி பரிக்ஷை பாஸ் பண்ணுவது கூடாதென்றும், இதை ஒரு ஸதாசார்யன் பக்கல் உபதேச முகமாகக் கேட்டு அதிகரிக்கவேண்டும் என்றும் எண்ணுபவர்கள். ஆகையால் ப்ராயேண உலக விஷயங்களில் விரக்தி ஏற்பட்டு, உபாயாநுஷ்டானங்களைப் பண்ணிவிட்டு, நற்போது போக்காகவும் ஆத்ம ஸந்துஷ்டிக்காகவும் காலக்ஷேபம் பண்ணுகிறவர்கள்தான் அநேகர். இளம் வயதில் பின்னால் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்யக்கூடிய சக்தியுள்ளவர்கள் இதைக் காலக்ஷேபம் பண்ணுவதில்லை. எனெனில்: சிறு வயதில் ஜீவனத்துக்கு உபாயமான ஒரு படிப்பைத்தான் அவர்கள் படிக்க முடியும். இந்த வேதாந்த விசாரத்தால் ஜீவநோபாயம் கிடைப்பதில்லை. இவ்வாறு வேதாந்தத்தில் நிஷ்பத்தியடைந்த பெரியோர்களை உலகம் ஆதரிக்காமல் இருந்ததுடன், அவர்களை உசிதமாகக் கௌரவிக்கவும் இல்லை. இவ்வாறு வ்ருத்தியை உத்தேசித்தும், ஆஸ்திகர்களுடைய பஹுமாநத்தை எதிர்பார்த்தும் வித்யையை அதிகரிப்பவர்கள், வேதாந்தத்தை விட்டுவிட்டு மற்ற சாஸ்த்ரங்களையே அதிகரித்தார்கள். ஸ்ரீமத் அழகியசிங்கர், தாம் ஸம்ப்ரதாய ப்ரவசநத்தை மேற்கொண்டதும், வேதாந்த வித்யையை எல்லாரும் மேற்கொள்ளாததன் காரணத்தை அறிந்து, தமது முதல் கைங்கர்யமாக இந்த வித்வத் ஸதஸ்ஸை ஏற்படுத்தினார்.

இந்த ஸதஸ் ப்ரதி வர்ஷமும் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருக்கும் இடத்தில் நடக்கிறது. பத்து நாட்கள் அமோகமாக நடந்து, தை மாஸம் உத்திராடத் திருநாளன்று அதுபூர்த்தியடைகிறது. பரிகணிதர்களான வித்வான்களுக்கும், ப்ரமுகர்களான சிஷ்யர்களுக்கும், வேதாந்த வித்யையை ஆதரிக்கும் ஆஸ்திகர்களுக்கும் ஸ்ரீமுகம் அனுப்பப்படுகிறது. ஸதஸ்ஸை அநுபவிப்பதற்கும், அதில் பங்கெடுத்துக்கொள்வதற்கும், எல்லாருக்கும் அநுமதி யுண்டு. அதில் வித்வான்களெல்லாம் தங்கள் தங்கள் திறமையை ப்ரகாசப்படுத்தலாம். அங்குக் கூடியிருக்கும் மற்ற வித்வான்கள் அவர்கள் திறமையை ச்லாகநம் செய்வார்கள். அவர்களுடைய திறமைகளைக் கண்டு லௌகிக ப்ரமுகர்களும்

அவர்களிடம் விசேஷமான பஹுமாநம் கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஸதஸ்ஸுக்கு அத்யக்ஷராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கரின் திருவுள்ளம் உகந்து, இந்த உகப்பே அவர்களுடைய எல்லா விதமான ச்ரேயஸ்ஸுக்கும் ஸாதநமாகிறது. வித்வான்களுக் கெல்லாம் அவரவர்களுடைய திறமைக்குத் தக்கப்படி உசிதமாக ஸம்பாவனையும், வந்துபோவதற்கான செலவுத் தொகையும் கொடுக்கப்படுகின்றன.

இந்த ஸதஸ்ஸினால் ஏற்படும் நன்மைகளும் பலவாகும். தேசத்தின் பல பாகங்களில் அங்கங்கே சிதறிக் கிடக்கும் ஸம்ப்ரதாயத்தில் தேர்ச்சி பெற்ற மஹான்களெல்லாம் மற்ற வித்வான்களை ஸந்திப்பதற்கும், அவர்களோடு கலந்து பழகி எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்கள் யூதத்தை பலப்படுத்திக்கொள்வதற்கும் உபகரிக்கிறது. வித்வான்கள் வாக்யார்த்தங்கள் சொல்லும்போது தங்கள் திறமைகளை மற்றவர்களுடைய திறமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு, தாங்கள் இன்னும் அதிகமாகப் பரிச்ரமப்பட்டுத் தங்களுடைய ஞானத்தை வ்ருத்தி செய்துகொள்ள உதவுகிறது. இளம் வித்வான்கள் தாங்கள் கற்ற வித்யையைக் கார்யாம்சத்தில் காட்டும் திறமையை அடைகிறார்கள். ஸதஸ்ஸைப் பார்த்து ஆனந்திப்பவர்கள், தாங்கள் காலக்ஷேபம் பண்ணுகவர்களாக இருந்தால், காலக்ஷேபம் பண்ணவேண்டுமென்று ருசியுண்டாகித் தாங்களும் காலக்ஷேபம் பண்ண ப்ரவ்ருத்தி செய்கிறார்கள். ப்ரதி வர்ஷமும் ஸதஸ்ஸுக்கு வரும் வித்வான்களைப் பார்க்கும்போது ஸ்ரீ அழகிய சிங்கருடைய இந்த முயற்சி நன்கு பலனளித்து வருகிறது நன்கு தெரிகிறது. இந்த வித்வான்களெல்லாம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் மிகவும் ப்ரதிபத்தியுள்ளவர்கள்; ஸ்ரீ அழகியசிங்கருடைய திவ்யாஜ்ஞையை ஶிரஸா வஹிப்பவர்கள். இவர்களை ஸ்ரீ அழகியசிங்கர் ஆங்காங்கு வேதாந்த வித்யையை ப்ரவசநம் செய்யுமாறு நியமித்தால், இன்னும் வெகு சீக்ரத்தில் வைதிக லக்ஷ்மியானவள் தேசமெங்கும் ஆநந்தக் தாண்டவம் புரிந்து தமது பர்த்தாவான எம்பெருமானை உகப்பிப்பாள். குழந்தைகளான நமக்கும் எல்லா விதமான நன்மைகளையும் புரிந்தருள்வாள். இதில் கொஞ்சங்கூட ஸந்தேஹமே இல்லை. இதுவரையில் வேதாந்தமென்றால் புலியோ கரடியோ என்று பயந்து ஒதுங்கியிருந்தவர்களெல்லாம், இனிமேல் வேதாந்தத்தை ஆனந்தமாக ரஸித்து இன்புறுவார்கள். ஜனங்களுடைய வாழ்க்கையும் வைதிக மார்க்கத்தை அநுஸரித்து மிகவும் தூய்மையாய் நடக்கும். நமது மனத்தின் பண்பும், ஆசாரத்தின் தூய்மையும், அநுஷ்டாநங்களின் சிறப்பும் இனிது கலந்து, நன்கு பரிமளித்து, நமது ஸமுதாயத்தை வானளவாய் உயர்த்திவிடும். இவைகளுக்கெல்லாம் நிதாநம் ஸ்ரீ அழகியசிங்கரே.

நமக்கெல்லாம் மிகவும் ப்ரமிப்பை உண்டுபண்ணும் இந்த மஹத்தான கைங்கர்யங்களைச் செய்தருளிய பின்புங்கூட, ஸ்ரீ அழகியசிங்கருக்கு த்ருப்தியுண்டாகி விடவில்லை. இந்தக் கைங்கர்யங்கள் என்னவோ மிகவும் பெரியவைதான். ஆயினும் இவற்றால் அசேஷமான ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்துக்கும் உபகாரம் ஏற்படவில்லை. ஸம்ஸ்க்ருத கலாசாலையிலும் அதைச் சேர்ந்த ஸம்ப்ர

தாய பாடசாலையிலும் சேர்ந்து, அங்குக் கற்றுக்கொடுக்கும் வித்யைகளை அதிகரிக்கும் வித்யார்த்திகள்தான் இதனால் பயன் அடைகிறார்கள். மாலோல வித்வத் ஸதஸ்ஸிலும், பாஷ்யம் முதலிய தர்சன க்ரந்தங்களைக் காலக்ஷேபம் பண்ணி த்ருடமான ஞானம் ஸம்பாதித்துக்கொண்டவர்களுக்கும்தான் இதில் பங்கெடுத்துக்கொள்ள முடியும். காலத்தினுடைய விபரீதப் போக்கினால் ஆத்மார்த்தமான விஷயங்கள் ஒன்றுமே தெரியாமல், ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்வது போல், உடம்புதின்றார்படியி லிருக்கும் பாமர ஜனங்களுக்கு இந்தக் கைங்கர்யங்களால் நன்மை இல்லை. ஆகையால் உசிதமான ஒருபாயம் செய்து இவர்களையும் நல்ல வழிக்குக் கொண்டுவரவேண்டு மென்று ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றியதில் வியப்பில்லை. இத்தகைய உசிதமான உபாயம் வேறு யாதாக இருக்கமுடியும்? ப்ரதி மாஸமும் பலவிதமான கதைகளையும் வ்யாஸங்களையும் கொண்டு, வைதிகமான திவ்யமணம் பரிமளிக்க, தத்வ ஹித புருஷார்த்தங்களை எல்லாருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற முறையில் உபதேசம் செய்யாமல் செய்துகொண்டு உலாவிவரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகைதான் அந்த உபாயம். அடியோங்களுடைய அபிப்ராயத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளிய மற்ற உபகாரங்களை யெல்லாம் ஒரு தட்டிலும், இதை ஒரு தட்டிலுமாக வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் இதன் பக்கம்தான் சிறப்புடையதாகும். ஸ்ரீ வேதாந்ததேசிகன் தம்முடைய தயாசதக ஸ்தோத்ரத்தில் மிகவும் அழகான அர்த்தம் ஒன்று அருளிச்செய்கிறார். தாம் மேற்கொண்ட விஜய யாத்ரை ஒன்றிலுமே வெற்றியில்லாமல் திரும்பாத எம்பெருமான், ஸம்ஸாரி சேதநர்களுக்கு உஜ்ஜீவநம் கொடுக்கவேண்டுமென்று ஸங்கல்பித்து, விஜய யாத்ரை ஒன்றை மேற்கொண்டார். சேதநன் பகவானுடைய திருவடிகளில் தலை வணங்கி ஓர் அஞ்ஜலியைச் செய்துவிட்டால், பகவான் வெற்றிகொண்டு விடுவார்; சேதநனும் கடைத்தேறிவிடுவான். ஆனால் ஸம்ஸாரி சேதநன் பகவானுக்கு வெற்றியை அவ்வளவு எளிதில் கொடுத்துவிடுவானா? அவன் பகவானோடு போர்தொடுத்தான். தான் பண்ணுகிற பாபங்களை யெல்லாம் பாணமாகத் தொடுத்துப் பகவான்மேல ப்ரயோகம் செய்தான். பாபமாவது பகவானுடைய நிக்ரஹ ஸங்கல்பம் தானே! அவருடைய ஆஜ்ஞை அநுஜ்ஞைகளை மீறி அவருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துவது தானே! இந்தப் பாபங்களுக்குப் பலன் முடிவில்லாத ஸம்ஸாரக் குழியில் அவனைத் தள்ளுவதுதான். அவ்வாறு செய்வதும் அவருக்கு மிகவும் ஸுலபம். ஆனால் அவர் அதற்காகவா விஜய யாத்ரையில் புறப்பட்டார்? அப்படிச் செய்தால் ஸம்ஸாரி சேதநனை உஜ்ஜீவிக்கப் பண்ணுவதற்காகக் கிளம்பிய அவருக்கு உண்டாவது தோல்விதானே! பகவான் ஸர்வஜ்ஞர். அவருக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவர் தமக்குத் தெரிந்த உபாயங்களை யெல்லாம் கொண்டு இந்த ஸம்ஸாரியின் பாணங்களை யெல்லாம் தடுத்துப்பார்த்தார். அவனுடைய பாபமாகிற அம்புகள் அவற்றையெல்லாம் ஊடுருவி அவர் திருமேனியில் தைத்துப் புண்படுத்தியனவேயன்றி, அவற்றைத் தடுக்க அவரால் முடியவில்லை. பார்த்தார் பகவான். கடைசி பக்ஷமாகத் தமது தயை என்னும் கவசத்தைப் போர்த்துக்கொண்டார். உடனே என்ன அத்புதமான மாறுதல்! சேதநனுடைய அத்

தனை பாப பாணங்களையும் அந்த அநுக்ரஹமாகிய கவசம் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டது. கடைசியில் சேதநன் கை ஓய்ந்தது. பகவான் திருவடிகளில் ஶரணாகதி பண்ணுவதைத்தவிர அவனுக்கு வேறு வழியில்லை. அவன் ஶரணமடைந்து உஜ்ஜீவித்தான். பகவானும் தம் விஜய யாத்ரையை ஸார்த்தமாகச் செய்தருளினார். இதுதான் ஸ்ரீ தேசிகன் ஸாதித்தருளிய அர்த்தம். நம் ஸ்ரீ அழகியசிங்கரும், வேறொன்றாலும் திருத்தமுடியாத சேதநர்களைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் பற்றி மேற்கொண்ட உபாயந்தான் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகை. இந்தப் பத்ரிகையின் ப்ரசாரத்தினால், வேறு வழிகளால் நல்ல மார்க்கத்துக்குத் திருப்ப முடியாத ஜனங்களை, ஸ்ரீ அழகியசிங்கர் மிகவும் ஸுலபமாக வைதிக மார்க்கத்துக்குத் திருப்பி வருகிறார். கையில் கத்தியை வைத்துக்கொண்டு ஒருவன் அடையும் வெற்றியைக் காட்டிலும், பேனாவின் முனையால் அடையும் வெற்றிதான் மகத்தானது என்பார்கள். ஏனெனில்: கத்தி பலத்தினால் ஒருவனுடைய உடலை மாத்ரம் வசப்படுத்தலாம். பேனாவின் எழுத்தால் அவனுடைய உள்ளத்தையே வசப்படுத்தி விடலாம். ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையின் ப்ரசாரத்தினால் ஸ்ரீ அழகியசிங்கர் இத்தகைய மஹத்தான வெற்றியை அடைந்துள்ளார். இந்தப் பத்ரிகையினால், பாமரர்களாக இருக்கும் சிஷ்யர்கள் பட்டி மேய்ந்து திரியாதபடி, ஸத்விஷயங்களை அவர்களுக்குப் போதித்தும், பண்டிதர்களாக இருப்பார்கள் தங்களது ஜ்ஞாந விகாஸங்களை ப்ரகாசப்படுத்த அவர்களுக்குத் தகுந்த மார்க்கத்தைக் காட்டியும், மற்றும் ஸம்ப்ரதாய கலாசாரங்களைத் தேச மெங்கும் பரப்பியும், ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளும் மஹோபகாரத்துக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். ஸ்ரீ அழகியசிங்கர் பத்ரிகையை நடத்தலாமே தவிர, அதை நன்றாய்ப் பரிமளிக்கச் செய்வதும், அதை வ்ருத்திக்குக் கொண்டு வருவதும், பத்ரிகைக்கு விஷயதாநம் செய்பவர்களும் அதை வாசிப்பவர்களுமான நம் கையில்தா னுள்ளது. எழுதும் விஷயம் ஸத்விஷயமாக இருந்தால் மாத்ரம் போதாது. அதைப் படிப்பவர்கள் படித்து ரஸித்து அநுபவிக்கும் வண்ணமும், அதை அநுஷ்டாநபர்யந்தமாகக் கொண்டுவரத் தூண்டும் வண்ணமும் விஷயங்களை எழுதவேண்டும். அதை வாசிக்கும்போது, வாசிப்பவர்களுக்குக் கொஞ்சமும் அஸ்வாரஸ்யம் உண்டாகக்கூடாது. நாமெல்லாம் மனிதர்களே. மனிதர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள். அவர்கள் நல்ல காரியங்களில் ப்ரவர்த்திப்பதும், கெட்ட காரியங்களில் இறங்குவதும், உணர்ச்சியானால் தான். ஆகையால் அவர்களுடைய உணர்ச்சி ஸத்விஷயங்களில் அநுதாபங் கொள்ளும் முறையில் விஷயத்தைப் பக்வமாக எழுதவேண்டும். இவ்வாறு பத்ரிகையை நன்றாக நடத்தத் தெரிந்தவர்கள் கையில் ஸ்ரீ அழகியசிங்கர் இதன் பொறுப்பைக் கொடுத்திருப்பது, மேலே கூறியதை யெல்லாம் திருவுள்ளம்பற்றித்தான் என்பது வெளிப்படை. திருப்பாணாழ்வார் திருவேங்கடத் திருப்பதியை, "மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத் தரவி னணையான்" என்று மங்களாசாஸநம் பண்ணியருளினார். திருமலையப்பனை நித்யஸூரிகள் 'இவர் எங்கள் எம்பெருமான்' என்று போற்றுகிறார்கள். இந்த பூமியில் வாழும் ஸம்ஸாரி சேதநர்களும் 'இவர்

எங்கள் எம்பெருமான்' என்று வணங்கி வழிபடுகிருர்கள். திர்யக் ஜந்துக்களாகிய வாநரம் முதலியவைகளும் இந்த எம்பெருமானைத் தங்களுடைய எம்பெருமாளுக எண்ணி வணங்கி வழிபடுகின்றன. இவ்வாறு எல்லாருக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிருர் எம்பெருமான். இதைப்போலவே நம் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையும் உயர்ந்த வேதாந்த விசாரங்களை யெல்லாம் தாங்கிக்கொண்டு, தனக்குள்ள பண்டித பக்ஷபாதத்தையும்; இனிய கதை கட்டுரைகளால் பாமரர்களிடம் உள்ள ப்ரீதியையும் வெளிப்படுத்திக்கொண்டு, எல்லாரும் இது தங்கள் பத்ரிகைதான் என்று நினைக்கும் வண்ணம் அத்புதமாக விளங்கிவருகிறது.

இது வரையில் இந்தப் பத்ரிகையை ஸேவித்து மகிழ்ச்சியடைந்து வந்துள்ள அடியோங்கள், இனி இதில் இன்னும் அநேக புது விஷயங்களையும் எதிர்பார்க்கிருேம். ஆழ்வார் ஆசார்யர்களுடைய தத்வ ஹித புருஷார்த்தங்களை விளக்குகிற திவ்யஸூக்திகளை, ரஸமான சிறுசிறு வ்யாஸங்களாக எதிர்பார்க்கிருேம். ஆழ்வார் ஆசார்யர்களுடைய திவ்ய சரித்ர வைபவங்களை விறுவிறுப்பாகவும் இனிமையாகவும் விளக்கும் வ்யாஸங்களை எதிர்பார்க்கிருேம். ஆசார அநுஷ்டாநங்களைப் போதிக்கும் வண்ணம் வைதிக குடும்பங்களில் அன்ருடம் நடக்கும் ஸம்பவங்களை அழகாகச் சித்தரித்துக் காட்டி, வைதிக விஷயங்களில் எல்லாருக்கும் ருசியை உண்டாக்கக் கூடிய வ்யாஸங்களை எதிர்பார்க்கிருேம். பக்தி மார்க்கத்தின் சிறப்பையும், ப்ரபத்தி வழியின் ஸர்வோபஜீவ்யமான தன்மையையும், காந்தையின் உபதேசம்போல் சொல்லாமற் சொல்லி விளக்கும் கதைகளையும் வ்யாஸங்களையும் எதிர்பார்க்கிருேம். பண்டிதர்கள் எழுதும் உயர்ந்த விஷயங்களைப் பாமரர்களாகிய அடியோங்கள் ரஸிக்கும்வண்ணம், ஆங்காங்கே மெருகு கொடுத்து லளிதமாக விளங்கும்படி வெளியிடுவதை எதிர்பார்க்கிருேம். ஆங்காங்கு நடக்கும் உபந்யாஸங்கள் கேட்பவர்களுக்கு மாத்ரம் உபஜீவ்யமாக நின்று விடாமல், அவற்றின் கருத்துக்களைச் சுருக்கமாக எல்லாரும் அறியும்வண்ணம் இப்பத்ரிகை வாயிலாக வெளியிடுவதை எதிர்பார்க்கிருேம். இன்னும் வாசிக்கும் விஷயத்தை அதிகமாக்கி, இந்த மாதப் பத்ரிகை படிப்படியாக பக்ஷப் பத்ரிகையாகவும், வாரப் பத்ரிகையாகவும் வரும் நாளையும் எதிர்பார்க்கிருேம். ஸ்ரீ அழகியசிங்கருடைய க்ருபா கடாக்ஷத்தால் இந்த அடியோங்கள் ஆசை நிறைவேறுமென்பதில் ஸந்தேஹமே யில்லை.

ஸ்ரீ அழகியசிங்கர் அடியோங்களுக்குச் செய்தருளியுள்ள இந்த உபகாரங்களை நினைக்கும்போது மெய் சிலிர்க்கிறது. "ஓய் மைத்ரேயரே! க்ருஷ்ண த்வைபாயந வ்யாஸரை ப்ரபுவான ஸாக்ஷாத் நாராயணன் என்றே தெரிந்துகொள்ளும். ஏன் அப்படி என்பீராளுல், பகவானைத் தவிர்த்த வேறு யாரால் மஹா பாரதத்தைப் பண்ண முடியும்?" என்று மைத்ரேயருக்கு அவருடைய ஆசார்யன் உபதேசித்தார். அடியோங்களுக்கும் பெரியோர்களாக இருக்கும் மஹான்கள், "நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விபவ ரூபமேதான். அவரைத் தவிர்த்து வேறு யாரால் இத்தகைய மஹத்தான

கார்யங்களைப் பண்ண முடியும் ?'' என்று தெளிவிக்கிறார்கள். பகவானுடைய அவதார மில்லாத வேறு யாரால் இத்தகைய அரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியும் ?

இவ்வளவு உபகாரங்களைச் செய்தருளிய ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவடி மலர்களில் அடியோங்களுடைய அநந்த கோடி ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீ அழகியசிங்கர் இன்னும் பல வாண்டுகள் திடமாக எழுந்தருளியிருந்து, இன்னும் பலபல உபகாரங்களைச் செய்ய அநுக்ரஹம் பண்ணும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளிலும் ப்ரார்த்தித்து ஶரண மடைகிறோம். அவர் இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து அடியோங்களைப் பரிபாலித்தருள ஶரண்யன் திருவுள்ளம் பற்றும்படி அவனை ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஹூ தை மீ [1950 ஹூ ஜனவரி – பிப்ரவரி மீ]

[உத்தராயணம், ஹேமந்த ருது, மகர மீ.]

14—1—50	1உ	சனிக்கிழமை	... ஸர்வ ஏகாதசி; மகர க்ருஷ்ண ஏகாதசி திதி; உத்தராயண புண்ய காலம்; ஸங்க்ராந்திப் பண்டிகை; திருப்பாவை சாத்துமறை
15—1—50	2உ	ஞாயிற்றுக்கிழமை	... கனு; பாரிவேட்டை
17—1—50	4உ	செவ்வாய்க்கிழமை	... சதுர்த்தசி திதி
18—1—50	5உ	புதன்கிழமை	... ஸர்வ அமாவாஸ்யை; அமாவாஸ்யை – ப்ரதமை திதி த்வயம்; ஸ்ரீ. அ. மடம் 42-ம் பட்டம் இஞ்சிமேடு ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
19—1—50	6உ	வியாழக்கிழமை	... த்விதீயை திதி
20—1—50	7உ	வெள்ளிக்கிழமை	... த்ரிதீயை திதி
21—1—50	8உ	சனிக்கிழமை	... அதிதி
22—1—50	9உ	ஞாயிற்றுக்கிழமை	... சதுர்த்தி திதி
25—1—50	12உ	புதன்கிழமை	... ரத ஸப்தமி
29—1—50	16உ	ஞாயிற்றுக்கிழமை	... ஸர்வ ஏகாதசி
31—1—50	18உ	செவ்வாய்க்கிழமை	... ஸ்ரீ. அ. மடம் 38-ம் பட்டம் திருக்குடந்தை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
2—2—50	20உ	வியாழக்கிழமை	... பௌர்ணமி; குருபுஷ்யம்; தைப்பூசம்
4—2—50	22உ	சனிக்கிழமை	... ஸ்ரீ திருமழிசைப் பிரான் திருநக்ஷத்ரம்
7—2—50	25உ	செவ்வாய்க்கிழமை	... ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்
9—2—50	27உ	வியாழக்கிழமை	... ஸப்தமி – அஷ்டமி திதி த்வயம்
10—2—50	28உ	வெள்ளிக்கிழமை	... நவமி திதி
11—2—50	29உ	சனிக்கிழமை	... மகர க்ருஷ்ண ஏகாதசி திதி

189266

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., வித்வான், L.T., திருவையாறு]

அலாவுத்தீன் கில்ஜியின் ஸேநாபதியாகிய மாலிக்கபூர் தென்னிந்திய தேவாலயங்களைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் சூறையாடியதைச் சரித்ரவாயிலாய்ப் பலரும் அறிவர். ஸ்ரீரங்கத்தை இந்தக் குழப்பத்திலிருந்து யார் எப்படிக் காப்பாற்றினர்களென்பதை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் பழைய இதழில் "வீரமணி" என்ற அடியேனது கட்டுரை வாயிலாக வாசகர் அறிந்திருக்கக்கூடும்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் திகழும் தேவாலயத்தைப்பற்றி மாலிக் கேள்வியுற்றான். பாண்டிய மன்னர்கள் அங்குச் செய்த அரிய பணிகளையும், காணிக்கையாக அர்ப்பணம் செய்த பொன் மணி முத்து முதலிய நவரத்நாபரணங்களையும், கருவூலத்திலுள்ள தங்கப் பாளங்களையும் பற்றிக் கேட்கக் கேட்கக் கொள்ளைக்காரனான அவன் உள்ளம் பெரிதும் அவாவினால் கொழுந்துவிட்டு எரிவது போலாயிற்று. ஆங்குத் திருக்கோயில்கொண்ட ஆண்டாளின் திருவடிவம், அவரது எல்லையற்ற கருணை, அங்கு நடக்கும் திருவிழாக்களின் ஆடம்பரம், தினந்தோறும் வந்து தரிசித்தின்புறும் பல்லாயிரக் கணக்கான யாத்ரிகர்கள், நகரத்தின் வளம், முதலியவற்றைக் கேட்ட அவனது மத உணர்ச்சி வெறியாம் நிலை எய்தியது. 'இவ்விக்ரஹத்தையும் உடைத்து இக்கோயிலையும் அழித்தால்தான் மக்களுக்கு உண்மையான அறிவு உண்டாகும்' என்று சபதம் செய்துகொண்டான் அவன். ஸ்ரீ வில்லிபுத்தூரை நோக்கிப் படையெடுத்துச் சென்று அந்த நகரையும் வளைத்து முற்றுகை யிட்டுவிட்டான்.

நகரில் பரபரப்பு ஏற்பட்டது. தெருக்களில் மகமதியரன்றி மற்று யாரும் நடமாடவில்லை. வீடுகளெல்லாம் சாத்தப்பட்டு ஒரே துக்கக் கோலமாயிருந்தது. கனத்த கவச மணிந்த காவாட்படைகள் 'டாக்டாக்' என்று பாதரக்ஷைகள் ஒலிக்கக் கையில் உருவிய கத்தியுடன் உலவினர். இடையிடையே கம்பீரமான அச்வங்களில் ஊர்ந்து, தளபதிகள் சிற்சிலர் இங்கு மங்கும் கண்காணித்து வந்தனர். "உஷார் ஹோ" (ஸித்தமாயிரு). "ராத்மே ஸோனாமத்" (இரவில் தூங்கவேண்டாம்). "தலாப்கே கிளாரேமேம் அப்ஸல் காபல்டூன் ஹை" (குளத்தின் கரையில் அப்ஸல் பட்டாளம் இருக்கிறது). 'உஸ் பொம்மன் பக்டோ' (அந்தப் பார்ப்பானைப் பிடி)—என்று இம்மாதிரியெல்லாம் வடநாட்டு மொழியில், கட்டளைகளும் மற்றும் செய்திகளும் எழுந்தன. வடபெருங்கோயிலுடையானது மூடிய கோபுரத்தின் முன்னம் ஒரு வைணவப் பெரியார் வணங்கி வீழ்ந்தார். "அன்றிவ் வுலக மளந்தாய் அடிபோற்றி" என்பதற்குள் அவர் வாய்ச் சொற்கள் தழதழத்தன. சில நிமிஷங்கள் கண்ணும் கண்ணீருமாய் ஏதோ புகன்றார். பிறகு உரத்த குரலில்,

"அறியாத பிள்ளைகளோம் அன்பினு லுந்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்"

என்று கதறினர். "ஆபத்பாந்தவா! உன்னையே புகலென்று வந்தடைந்த எம்மை ம்லேச்சர்பால் காட்டிக்கொடுத்துவிடாதே. எம் சிமோட்டியாய், குலக்கொழுந்தாய், கற்பகவல்லியான ஆண்டாளின் அணிமாடக் கோயிலுக்கு ஏதும் இன்னல் வாராது உன்னையுங் காத்து உனைப் பணியும் எம்மையுங் காத்தருள்வாயாக. இது நீ செயல்வேண்டும். ஆண்டாளும் வில்லிப் புதுவை நகரும் உய்ய என் உயிரை வேண்டுமாயின் தருகிறேன்" என்றார்.

"அரே காபிர்! ஸாப்கே ஷாமியானமே 'இத்னீ பஹாதுரோம் தேக்தே. துமாரா புத்லீகீ தமாஸ் கர்னேகா க்யா நீரஜ்?" [எஜமானனது கூடாரத்தில் இத்தனை வீரர் பார்த்திருப்ப, உனது பொம்மைக்கு வணக்கம் செய்ய உனக்கு என்ன தைரியம்?] என்றான் ஓர் ஸிப்பாஹி. பெரியவர் புன்சிரிப்புடன் 'அப்பா! பொம்மையல்ல; உலகெலாம் ஆளும் புனிதனின் தூய திருமேனி' என்றார். ஹா ஹா ஹா என்று பல மகமதிய வீரர் சிரித்தனர். பெரியார், 'வீரர்களே! இந்த நகரத்தை விட்டுச் செல்லுங்கள். உங்களுக்குப் புண்ணிய முண்டு' என்றார். மாலிக் எழுந்துவந்தான். பெரியாரைப் பார்த்துச் சிரித்தான். 'அரே! உங்க ஸாமி ரெண்டு துண்டாய் நாளை நம்பள் கைலே உடையரான்' என்றான். பெரியவர் காதைப் பொத்திக்கொண்டு, 'அடாது செய்தவர் படாது படுவர்; வேண்டாம் உங்கள் வழியே செல்லுங்கள்' என்றார். மாலிக், தகதக வென மின்னும் உருவின கத்தியைக் காட்டி 'உன்னை ஸாவ அடிக்கிறான்' என்றான். பெரியவர், 'ஆண்டாள் அடித் துகளாய்ப் பிறந்த யாம் ஒன்றுக்கும் அஞ்சோம்; கேள். இருந்த இடத்தில் ஓர் இடரு மின்றி இருக்க உனக்கு ஸம்மதமானல் நான் சொல்வதை..............' என்று சொல்லுமுன் மாலிக் குறுக்கிட்டான்.

மாலிக்.—அடா பாகல்! (பைத்யமே!) இதோ உன் கோயிலைப் பொடி பொடி செய்கிறான்.

பெரி.—என் பிணத்தின்மேல் நடந்துதான் நீ உள்ளே போகவேண்டும்.

மாலிக்.—பஹாதுரோம்-சலியே—! காள வாத்யத்தின் ஒலி கேட்டது. நூற்றுக்கணக்கான வீரர்கள் வடபெருங் கோயிலுடையான் கோயிலை இருப்பு உலக்கைகளால் தகர்த்தனர். கதவு பிளந்தது. வீரர் உள் நுழைந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் கோபுரத்தின் மூன்றும் தளத்தி லிருந்து ஓர் ஒலி எழுந்தது. 'வீரனே! நான் இறந்த பின்னேயே உட்புகுவாய்' என்றார் பெரியார். அங்கே கதவு திறந்தவுடன் அவர் எறிவிட்டார். அஸ்தமித்து இரண்டு முஹூர்த்தந்தா னிருக்கும். எல்லோரும் ஆச்சர்யத்துடன் மேனோக்கினர்கள். 'வீரனே! இக்கோயிலை விட்டுச் செல்' என்றார் பெரியார்.

'செல்லாவிட்டால்—'என்றான் மாலிக்.

'உயிர் துறப்பேன்' என்றார் பெரியார்.

மகமதிய வீரர்கள் கடகடவெனச் சிரித்தனர். மாலிக் உரத்த குரலில் "அரே! மரூம் மரூம் போல்கர் தும் படா காயர்" (சாவேன் சாவேனென்று பெருங் கோழையாயிருக்கின்றாய்!) என்றான்.

பெரியவர் மறைந்தார். ஆறாவது தளத்தில் தோன்றினார். மறைந்தார். ஒன்பதாவது தளத்தில் தோன்றினார். பின் பத்தாவது; அதற்குப் பின் பதினோராவது தளத்தில் ஒரு வெள்ளைப் பூனைபோல் வெளிநின்றார். பிறகு திடீரெனக் கீழே விழுந்தார். வீரர்கள் ஹா ஹா என்றனர். பெரியவர் ரக்த வெள்ளத்தில் நசுங்கிக் கிடந்தார். மாலிக் வாய் பேசாது வீரருடன் திரும்பினான். கூடாரத்தில் படுக்கையில் புரண்டுகொண்டு கிடந்தான். தூக்கம் வரவில்லை. ஒரு வெள்ளி விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. ஒரு பெரும் வெள்ளி ஜாடியில் வாசனைப் புகை போடப்பட்டுக் கூடாரமெங்கும் நறுமணம் பரவிற்று. எங்கும் சந்தடி யடங்கிற்று. மாலிக்கிற்குத் தூக்கம் வரவில்லை. பெரியாரின் தீரம் அவன் மனத்தை வாட்டியது. புரண்டான்; எழுந்தான்; மறுபடியும் படுத்தான். நித்ரை செய்வதுபோல் இருந்தான். ஆனால் நித்ரை வரவில்லை. பாதி இரவும் ஆயிற்று. பெரு வழிகளில், வேற்றூர்க்குச் சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிகளின் கடகட சப்தம் கேட்கப்படவில்லை. கலாபத்தின் காரணமாக வ்யாபாரம் ஜன நடமாட்டம் இவை ஸ்தம்பித்திருந்தன. ஆனை மண்டபத்திலிருந்து ஆண்டாளின் ஆனைகள் பிளிறும் பேராவமும், சங்கிலியைக் கற்றூண்களில் மோதும் ஒலியும் இடைவிடாது கேட்டன. மாலிக்காபூர் அப்பெரியார் இறந்ததில் திடுக்கிட்டான். யுத்தகளத்தில் பிணங்களோடே—கபந்தங்களோடே—நடந்து சென்று அஞ்சாது போர் செய்த அவ்வீரன், இப்பெரியாரின மன உறுதியையும் தெய்வ அன்பையும் கண்டு வியந்தான். மனங் கலங்கினான். தன்னை மாபாவி யெனக் கருதினான். ஒரு நல்ல உயிரைப் பலி கொடுத்ததாக அவன் மனதில் முதன் முதலாகத் தாபம் எழுந்தது. இவ்விஷயத்தை மறக்க முயன்றான். முடியவில்லை. எழுந்தான்; படுத்தான்; கூடாரத்தருகில் மூன்றாவது யாமத்தின் ஆரம்பத்தை அறிவிக்கும் நகரீ (முரசம்) வாத்யம் முழங்கியது. மறுபடியும் எங்கும் நிச்சப்தம் பரவிற்று.

"மாலிக்! அரே மாலிக்!" [ஒரு குரல்]. மாலிக் எழுந்தான். என்ன குரல் என்ன குரல்! தேன் வெள்ளம் அலைபிட்டாரவாரிக்கும் குரல்! மனக் கவலையெல்லாம் மாற்றும் குரல்! ஓர் அமுதக் கடல்போல் கிளர்ந்து ஆறுதலளிக்கும் குரல்! எழுந்தான் மாலிக். கூடாரம் முழுவதும் பச்சையும் நீலமும் கலந்து பூசியதுபோன்ற ஓர் அத்யத்புதமான ஜோதி பரவியது. படுக்கை, பாத்ரங்கள், ஆடைகள், வாத்யங்கள் எல்லாப் பொருள்களும் அந்த மரகதப் பச்சைச் சுடரில் ஆழ்ந்து மிளிர்ந்தன. "மாலிக்! க்யா ஸோதேஹோ!" [உறங்குகின்றாயா?] என்ற இனிய குரலில் தன் மொழியாலேயே அவ்வொலி

கேட்டது. மாலிக் திடுக்கிட் டெழுந்தான். ஓர் இளம்பெண்ணைக் கண்டான். பத்து அல்லது பதினொன்று வயதிருக்கலாம். உயர்ந்த ஆக்ருதி. கறுத்துச் சுருண்டு மினுமினுத்த குழற்கற்றை தூக்கி உயர்ந்த கொண்டையாகித் திகழ்ந்தது. அக்கொண்டை பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகிய விசாலமான முகம். கறுத்து நீண்டு அருள் வெள்ள மிடுகின்ற அழகிய கண்கள். எடுத்த நாஸிகை. வெண்பட்டுத் துணியாலாகிய நீண்ட அங்கியும், பச்சை வெல்வெட்டினு லாகிய அழகிய நிஜார்களும், ரோஜா மஹ்மல் துணியாலாகிய மேலாடையுமாய், அப்பெண்மணி ஒரு பட்டாணிய ஸ்த்ரீயாகக் காணப்பட்டாள். அங்கியிலும் மற்றும் உடைகளிலும் பொன் ஜரிகைப் பூக்கள் கண்ணைக் கவரும் வண்ணம் வேலை செய்யப்பட்டிருந்தன. இடையில் வஜ்ரத் தொங்கல்களா லலங்கரிக்கப்பெற்ற ஒரு முத்துப் பட்டிகை தரித்திருந்தாள். தன் அழகிய கால்களில் அச்சிமாட்டி பச்சை வெல்வெட்டில் அழகிய பொன் ஜரிகை வேலை செய்யப்பெற்ற செருப்புகளை அணிந்திருந்தாள். முகத்தில் களிப்புக் கூத்தாட, தான் பெற்ற பெண் போன்ற அன்பு மனத்தில் தாண்டவ மாட, மாலிக் தன் இரு கைகளையும் விரித்து, “ஆயோ! பேட்டி! தும் அரப்கீ ரானீ ஹோ! யா பாரஸ் – யா துர்க்கிஸ்டான் – யா பரங்கி ஸ்டான்—(இனி வாசகர்களுக்காகத் தமிழிலே எழுதுவோம்) – ‘வா அம்மா’ என்றான். பெண்மணி புன்சிரிப்புடன் மாலிக்கின் படுக்கைக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு தாழ்ந்த மேஜைமேல் உட்கார்ந்தாள்.

மாலிக்—பெண்ணே! இந்த இருண்ட நேரத்தில்............

பெண்—மாலிக்! இவ்வுலகங்கள், கடல், மலை, வானம், நக்ஷத்ரங்கள், இவை யாவும் என்ன சொல்லுகின்றன? (பெண்ணின் கண்களில் தீப்பொறி எழுந்து அடங்குவது போலாயிற்று.)

மாலிக்—மை நஹீம் ஜாந்தா ப்யாரீ—(யானறியேன் கண்ணே!)

பெண்—“மாலிக்! ஸர்வ கர்த்தனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வ தயாபரனாய், ஸர்வ சக்தனாய் ஒரு கடவுள் உண்டென்றுதானே. பரம க்ருபாளுவான அக்கடவுள் ஸகல ஜனங்களையும் படைத்துப் படைப்பில் புழு எறும்பு முதலாம் ஓரோ ஜீவனையும் எல்லையற்ற அன்புடனும் அருளுடனும் நேசிக்கிறானென்றால், மக்களை வதைத்து, மாக்களைக் கொன்று, நாட்டைச் சூறையாடி நலிவுறுத்தும் பணி யாது? மாலிக்! நாம் எச்செயல் புரியினும், இறைவன் முன் ஒருநாள் அதற்குப் பதில் சொல்லியே தீரவேண்டு மல்லவா?” என்றாள். மாலிக் துயருற்ற கண்களுடன் அப்பெண்ணை நோக்கினான். தன் கைகளால் தன் முகத்தை மூடிக்கொண்டான்.

பெண்—மாலிக்! வயல்கள் பாழாயின. வாய்க்கால்களில் பசுக்கள் வீழ்த்தி அடிக்கப்பட்டு அந்தப் புனிதமான ம்ருகங்களின் பிணங்கள் அழுகி நீர் கெடுமாறு செய்யப்பட்டது. வீடுகள் கொள்ளை யடிக்கப்பட்டன. மாதர் உதவியற்று ஓடுங்கால் பிடிபட்டுக் கற்பும் உயிரும் கெடுமாறு செய்யப்பட்டனர். மாலிக்! வீரருக்கு இதுவோ அடையாளம்? வந்துள்ள யுத்தத்தைப் போராடு

வது கடமை. கொள்ளைக்கும் கொலைக்குமே புறப்பட்டு, சிசுக்கள் பெண்கள் பேதைகள் பெரியார் இவர்களை அழித்து, அழியாத நரகம் புகுவதோ வீரம்! மாலிக்! கடவுள் இதற்காகவே மகமதியரைப் படைத்தா ரென்று கொரான் கூறுகிறது? பரந்த உலகில் நிற்க இடமும், உண்ண உணவும், ச்வாஸிக்கக் காற்றும், பருக நீரும், அல்லா உலக மக்கள் யாவர்க்கும் ஒருங்கே அளிக்கின்றானல்லவா? காலத்தாலும் தேசத்தாலும் அவன் பெயர் மாறுகிறது. அருள் மாறவில்லையே. அவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள நித்யமான ஸம்பந்தம் மாறவில்லையே. இப்படி யிருக்க, மாலிக்! அவனது மக்களைக் கொன்று குவிக்கும் நீ அக்கருணைப் பெருமலைக்கு என்ன விடை கூறுவாய்? பேதாய்!

அப்பெண்மணியின் சொல்லில் உறுதியும், வடிவத்தில் பேரழகும், கண்களில் நீர்த்துளிகளும் போராடின. "மாலிக்! நாச வேலைகள் பாவமானவை. எழு; எழு. இறைவன் தொண்டில் ஈடுபடு. கோவிலிலும், சமணர் கோட்டத்திலும், புத்தர் பள்ளியிலும், நாஸ்கர் உள்ளத்திலும்கூட விளங்குபவன் அவனே. கருணையே அவன் குணம். கருணையைக் கைப்பிடி. அவனே கருணை.

மாலிக் கீழே மண்டியிட்டான். 'அழகிய பெண்வடிவமான குருவே! என்னை உய்விக்கும் இறையே! நீ எங்குள்ளாய்?' என்றான். பெண் அவனை அழைத்துச் சென்றாள். மாலிக் பின் தொடர்ந்தான். கோபுர வாயிலைக் கடந்து இருவரும் பெரியாரின் திருமேனி கிடந்த இடத்தே நின்றனர். பெண் கண்களில் நீர் மல்க, 'இதோ இவர் கடவுள் அன்பே வடிவெடுத்த உத்தமன். ஆவியை ஓர் அழகிய மலர்போல் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார்' என்று கூறிக் குனிந்து, அப்பெரியவரின் திருமேனியை உற்று நோக்கினாள். பின் எழுந்து நடந்தாள். ஒரு நந்தவனத்தைத் தாண்டினாள். வேறொரு தேவாலயத்தைச் சேர்ந்தாள். 'மாலிக்! நான் இங்கே இருக்கிறேன். இவ்வூர் எனதூர். இக்கோயில் என் இருப்பிடம்' என்று புன்னகையுடன் சொன்னாள். மாலிக் திடுக்கிட்டு, 'மகமதியப் பெண்ணாகிய நீ இந்த இந்துக்கள் கோயிலில் எப்படி?........' பெண் சிரித்தாள். 'மாலிக்! மகமதியரைப் படைத்த மாதவனே ஹிந்துக்களையும் படைத்தான். நான் மகமதியப் பெண்; பௌத்தப் பெண்; சமணப் பெண்; எந்த ஜாதியு மாவேன்; எனக்கு இந்தப் பரந்த உலகமே இடம். உலகெல்லாம் படைத்து அளிக்கும் உத்தமனே ப்ராணநாதன்....' என்றாள். ஒரு பேரொளி பரந்தது. பெண் கோயிலுக்குள் மறைந்தாள். வெல்வெட் நிஜார் பளீர் பளீர் என்று மின்ன, பட்டு அங்கி சலசலவென, இடையில் முத்துப் பட்டிகை கண்ணைப் பறிக்க, தலையிற் கருங்குழற் கொண்டை மலர்க் கொத்துக் கமழ அப்பெண் மறைந்தாள். விடியும்பொழுது ஸ்ரீ ஆண்டாள் கோவில் முன்னணியில் மாலிக் மண்டியிட்டுக் கைகுவித்து த்யாநத்தில் ஆழ்ந்து காணப்பட்டான்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸம்பாதகரின் குறிப்புகள்

—:o:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் நவம வர்ஷாவதாரம்

இந்த ஸஞ்சிகையிலிருந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஒன்பதாவது ஆண்டு ஆரம்ப மாகிறது. பரம க்ருபையுடன் ஸ்ரீ அழகியசிங்கரால் லோகோஜ்ஜீவனார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுச் சென்ற எட்டு வர்ஷ காலமாய் இப் பத்ரிகை பல வழிகளிலும் ஆஸ்திக்யத்தைத் தழைத்தோங்கும்படி செய்ய முயன்று, அதில் த்ருப்திகரமான முன்னேற்றத்தையும் அடைந்துவருகிறது. இவ்வாறு இப்பத்ரிகை சிறந்து விளங்குவதற்கு, இதற்கு விஷயதானம் செய்துவரும் வித்வான்களின் நிர்வ்யாஜமான க்ருபையும் சந்தாதாரர்களுடைய ஆதரவுமே முக்ய காரணங்களாகும். தங்களுடைய ச்ரமத்தைப் பொருட்படுத்தாமலும், எவ்வித கைம்மாறையும் எதிர்பாராமலும், நம் ஸித்தாந்தத்தின் அரிய உண்மைகளை அறிய ஆவலுள்ளவர்கள் அவற்றை அறிந்து பயன் பெறவேண்டு மென்ற தாராள நோக்கத்துடனேயே நமது வித்வான்கள் வ்யாஸங்களை எழுதி யனுப்பி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும், நமது அபிமானிகளான சந்தாதாரர்களுக்கும், நம்முடைய மனமார்ந்த க்ருதஜ்ஞதையை ஸவினயம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இப்படித் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களான விஷய ப்ரதானம் செய்பவர்களையும், ரஸித்து அனுபவிக்கும் வாசகர்களையும் கொண்ட ஒரு சிறந்த ஸம்ப்ரதாயப் பத்ரிகையாய் இதைத் திகழும்படி செய்து, இது விஷயத்தில் மார்க்கதர்சியாயிருந்த ஸ்ரீ. உப. மஹர்ஷி ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் மஹோபகாரத்தை எந்நாளும் மறவோம்.

இப் பத்ரிகையில் வெளிவரும் சில வ்யாஸங்கள், இன்னும் கொஞ்சம் ஸரளமாயும் சுருக்கமாயும் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருந்தால், எல்லோரும் படித்துப் பயன் பெறக்கூடு மென்று நமது வாசகர்களில் சிலர் அபிப்ராயப்படுவதாகத் தெரிகிறது. இது விஷயமாக வேண்டிய முயற்சி செய்யப்பட்டுவருகிற தென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நம் ஸித்தாந்தத்தின் தத்வார்த்தங்கள், சாஸ்த்ரங்களில் ஆழ்ந்த ஜ்ஞானமுடையவர்களால் நன்றாக அறியக்கூடிய ப்ரமாணங்களையும் யுக்திகளையும் கொண்டு நிர்த்தாரணம் செய்யப்பட்டவை. ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும், பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களையும், மற்ற க்ரந்தங்களையும், அவை

களி லடங்கிய விசேஷார்த்தங்களுடன் ரஸித்து அநுபவிக்கவேணு மென்ருல், நம் ஸித்தாந்தத்தின் தத்வார்த்த ஜ்ஞாநமும், வேத இதிஹாஸ புராணுதிகளில் சொல்லப்பட்ட ஸூக்ஷ்மமான அர்த்தங்களில் தெளிவும், ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநமும் வேண்டியிருக்கின்றன. இப்படி மிக்க பரிச்ரமப்பட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய கம்பீரமான ஸித்தாந்தார்த்தங்களை, அவைகளில் பரிசயமே யில்லாதவர்கள் கூட ஸுலபமாய் அறியக்கூடிய வகையில் வ்யாஸங்கள் மூலம் சுருங்கச் சொல்லி விளங்க வைப்ப தென்பது ஒரு தனிக் கலை. அக் கலையில் நமது பண்டிதர்கள் இன்னும் நன்ருகத் தேர்ச்சி பெற்று விஷய ப்ரதாநம் செய்து, இப் பத்ரிகையை எல்லோரும் படித்துப் பயனடையும்படி செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்ளுகிருேம். நமது வாசக மஹாசயர்களும் இது விஷயத்தில் தங்களுக்குத் தோன்றும் புதிய யோசனைகளையும் எமக்குத் தெரிவிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிருேம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ ராமகானுமுத பாராயணம்

விரோதிஸு மார்கழிமீ 16உ சனிக்கிழமை (31—12—49) ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, அரக்கோணம் தாலூகா அவளூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீவைஷ்ண வர் குழாத்தினிடை, ஸ்ரீமத் ராமாயண பாராயணம் இன்னிசையுடன், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. உப. கொ. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி திருமாளிகையில் நடந்தேறியது. இதனை, ஸ்ரீமதி விஜயா ராமஸ்வாமி ஸகுடும்பமாய்ப் பாடி, இவ்வூர் வாஸிகள் அனைவர்க்கும் இன்ப மூட்டினுர். இந்நூலை இயற்றியவர் ஸ்ரீமான் S. V. ராமஸ்வாமி ஐயங்கார். இது, சிறுபான்மையாக வால்மீகி ராமாயணத்தையும், பெரும்பான்மையாகக் கம்ப ராமாயணத்தையும் தழுவி, எளிய நடையில், பல வகைச் சந்தங்களில், படிப் போர் மனம் நெகிழுமாறு அமைக்கப்பட்ட ஸுந்தர காண்டத் தமிழ் இசை நூல். இது 300 பாக்கள் கொண்டது. தன் பெயருக் கேற்றபடி, இது சொற்சுவையும் பொருட் பொலிவு முடையதாய், கதா ஸந்தர்ப்பங்களுக்குக் கேற்றவாறு இசையினி மையும் வாய்க்கப் பெற்று விளங்குவது. இந்நூலை அவர்கள் பாடி ப்ரஸங்க மிடுகையில், அதை ஆபாலவ்ருத்தாள் அமைதியாய்க் கேட்டு அநுபவித்து ரஸித்தனர்.

T. S. அநந்தாசார்யர்
[கவர்ன்மெண்ட் பென்ஷனர்]

அவளூர்
1—1—50

* * * * * *

ஒரு தார்மிகரின் மறைவு.

ஸ்ரீமான் S. N. ஸ்ரீநிவாஸையர் அவர்கள் தமது 77-வது வயஸ்ஸில், தம்முடைய மாப்பிள்ளை ஸ்ரீமான் A. S. பரதன் (General Manager, Press Trust of India Bombay) அவர்களின் இல்லத்தில் சிறிது காலம் தேஹம் அஸ்வஸ்தமாயிருந்து 23—12—49-ல் காலமான செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஷை ஐயர் அவர்கள் ஸ்ரீ அஹோபில மடத்தின் சிஷ்யர். அவர் 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய

சிங்கரிடம் ஸமாச்ரயணம் பெற்றவர். ஸம்ஸ்க்ருதத்திலும் ப்ரபந்தங்களிலும் பரிசய முள்ளவர். ஆசார்ய பக்தி நிறைந்தவர். அவரது பரோபகாரமும் தர்மசிந்தனையும் இந்தப் பக்கங்களில் ப்ரஸித்தம். அன்னார் கோயம்புத்தூர் அட்வகேட். ஸ்ரீமான் S. N. வெங்கடேசய்யரின் ஸஹோதரர். கள்ளிக்கோட்டை Press Trust of India வின் மானேஜரும் எடிடரு மாவர். ஸ்ரீமான் கைலாஸம் ஐயரவர்களின் குமாரர். சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீமான் பாலகிருஷ்ணய்யர் அவர்களின் ஸஹோதரியின் புதல்வர்.

கள்ளிக்கோட்டை,
25—12—49. ஈசுவர (ராமானுஜ) ஐயர்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1–12–'49 முதல் 5–1–'50 வரை சந்தா வரவு

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை. ரூ.
2	ஸ்ரீ.	M. N. ஸ்ரீநிவாஸாசாரியர், மோஹனூர்	47	3
5	,,	V. R. நாராயணன், பஸங்வங்குடி	50	3
17	,,	R. A. சேஷாத்ரி, மயிலாப்பூர், சென்னை	50	3
18	,,	M. K. ஸ்ரீநிவாஸய்யங்கார், தாதர் பம்பாய்	50	3
73	,,	J. வரதராஜய்யங்கார் அட்வொகேட், திருநெல்வேலி	47	3
143	,,	T. K. நம்பி ஐயங்கார், மயிலாப்பூர்	49	3
173	,,	N. கோபாலய்யங்கார், வக்கீல், பரமக்குடி	48	3
198	,,	P. S. ராகவய்யங்கார், திருநெல்வேலி	48, 49	6
201	,,	T. K. பார்த்தஸாரதி, அட்வொகேட், திருவல்லிக்கேணி, சென்னை	48	3
225	,,	A. மாதவய்யங்கார், பஸவங்குடி	49	3
241	,,	T. பார்த்தஸாரதி ஐயங்கார் B.A., L.T., கிருஷ்ணப்ப நாயகன் அக்ரஹாரம், சென்னை	49	3
246	,,	M. S. விஜயராகவாசாரியர், சோகத்தூர்–	47,48,49	9
247	,,	N. S. நாராயணய்யங்கார், திருப்பூர்	49	3
276	,,	V. சக்ரவர்த்தியாசாரியர், கல்யாணபுரம்	49	3
278	,,	வாத்யார் சேஷாத்ரி அய்யங்கார், திருக்கண்ண மங்கை	47	3
297	,,	R. ஸாரநாதய்யங்கார், வக்கீல், விருத்தாசலம்	49	3
321	,,	R. வரதாசாரியர் B.A., L.T., சைதாப்பேட்டை,	49	3
332	,,	S. ஸ்ரீநிவாஸாசார்யர், மோகனூர்	48	3
410	,,	அப்பா ஸ்ரீநிவாஸய்யங்கார், புதுடில்லி	49	3
419	,,	K. பார்த்தஸாரதி அய்யங்கார், பண்ணுருட்டி	49	3
422	,,	E. R. சக்ரபாணி அய்யங்கார் இணைதிருமங்கலம்	49	3
424	,,	R. குப்புஸ்வாமி ஐயங்கார், ஏமப்பூர்	49	3
473	,,	V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல்மாம்பலம்	49	3
546	,,	K. R. பத்மநாபய்யங்கார், பம்பாய்	47, 48, 49	9
702	,,	K. S. ராகவாசாரியர், G. T. சென்னை	49	3
704	,,	S. சடகோபாசாரியர், கும்பகோணம்	49	3
787	,,	K. தேசிகாசாரி, மாதுங்கா, பம்பாய்	49	3

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை. ரூ.
823	,,	R. V. ராஜகோபாலய்யங்கார் மயிலாப்பூர்	49, 50	6
833	,,	A. C. ஸ்ரீநிவாஸாசாரியர், அட்வொகேட், கோபாலபுரம், சென்னை	50	3
850	,,	P. S. நாராயணய்யர், மயிலாப்பூர், சென்னை	49, 50	3-12
854	,,	T. S. சாரங்கபாணி ஐயங்கார், தென்மருதூர்	49	3
855	,,	V. R. கோபாலய்யங்கார் B,A., L,T., ஸ்ரீரங்கம்	50	3
856	,,	ரகு—ஸ்ரீநிவாஸ தாதாசாரிய ஸ்வாமி, திருச்சேறை	50	3
857	,,	V. V. சாரி, Income-tax Commissioner, பம்பாய்	50	3
858	,,	K. I. N. அய்யங்கார், Controller of Inspection ,,	,,	3
859	,,	R. ஸ்ரீநிவாஸமூர்த்தி, Under Secretary ,,	,,	3
860	,,	K. R. ஆராவமுதன் ,, ,,	,,	3
861	,,	A. ராஜகோபாலன், Deputy-Agent [Tata] ,,	,,	3
862	,,	N. R. வேணுகோபால், Deputy Director ,,	,,	3
863	,,	S. ரங்காசாரியர், கல்யாண் ,,	,,	3
864	,,	T. R. ரங்காசாரியர் ,, ,,	,,	3
865	,,	R. ஜகந்நாதன் ,, ,,	,,	3
866	,,	S. ராமஸ்வாமி அய்யங்கார், தாதர் ,,	,,	3
867	,,	P. G. ஸ்ரீநிவாஸன் ,, ,,	,,	3
868	,,	V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,, ,,	,,	3
869	,,	S. நரஸிம்மாசாரியர், பாந்த்ரா ,,	,,	3
870	,,	N. A. ஸ்ரீநிவாஸாசாரியர், கார் ,,	,,	3
871	,,	P. N. விஜயராகவன், தாண ,,	,,	3
872	,,	V. ஸ்ரீநிவாஸன், செம்பூர் ,,	,,	3
873	,,	M. S. ராமானுஜாசாரியர், மாதுங்கா ,,	,,	3
874	,,	S. சேஷாத்ரி ,, ,,	,,	3
875	,,	P. R. ஸுந்தரராஜன் ,, ,,	,,	3
876	,,	A. ரங்கஸாமி ,, ,,	,,	3
877	,,	P. ராமஸ்வாமி ,, ,,	,,	3
878	,,	E. S. L. நரஸிம்ஹன் ,, ,,	,,	3
879	,,	S. T. சாரி ,, ,,	,,	3
880	,,	T. S. K. சாரி ,, ,,	,,	3
881	,,	G. சார்ங்கபாணி ,, ,,	,,	3
882	,,	R. தேசிகன் ,, ,,	,,	3
883	,,	K. ரங்கஸாமி ,, ,,	,,	3
884	,,	K. ராகவாசாரியர் ,, ,,	,,	3
885	,,	K. L. தாதாசாரியர் ,, ,,	,,	3
886	,,	K. வெங்கடராகவாசாரியர் ,, ,,	,,	3
887	,,	V. ஸ்ரீநிவாஸன் ,, ,,	,,	3
888	,,	V. ராகவன் ,, ,,	,,	3

மொத்தம் ரூ. 213-12

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.
இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை.

மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—
P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. M. 4437.

ஓர் விண்ணப்பம்

ப்ரியாவின் பம்பாய் ஏஜெண்டின் விலாஸம்.

M. V. VARADACHARI, B.A.,

od Bunder Road, Jogesheoari P.O. BOMBAY.

பாய் நகரத்திற்கும் பம்பாய் மாகாணத்திற்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ
சந்தாதாரர்களைச் சேர்க்கும் ஏஜெண்டாக ஏற்படுத்தப்பட்
சந்தாதாரர்களாகச் சேருபவர்கள், இவரிடம் தங்கள் சந்தாத்
வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். இவ்விடம் ஆபீஸுக்குத்
அவர்கள் செலுத்திய தோகைக்கு ரசீது அனுப்பப்படும்.
ஞ்சிகையும் தொடர்ந்து அனுப்பப்படும்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

சார்ஜுகளின் விபரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ.	20
,, உட்புறம்	,,	,,	ரூ.	15
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ.	10

ஒப்பந்த (Contract) விளம்பரங்களுக்குக் கட்டணம் இன்னும் குறைவாகும்.

(குறிப்பு) முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, மதராஸ்—7.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachari 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.